தமிழ் மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கியத் தொகுப்பு

தரம் 10

பகுதி III வினாத்தாளுக்குரிய பாட அலகுகளை உள்ளடக்கிய

இலக்கிய வினா விடைத் தொகுப்பு



தொகுப்பாசிரியர்
இரா. நிஷாந்தன்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்
கிளிநொச்சி மாவட்டம்



நீதிப்பாடல்கள்

அலகு 01

→ மனித வாழ்க்கையை செம்மைப் படுத்தும், நல் வழிப்படுத்தும் நீதிக் கருத்துக்களை பாடல்களாக கொண்டிருப்பவை நீதிப்பாடல்களாகும்.

→ இத்தகைய நீதி பாடல்களை கொண்டமைந்த நீதி நூல்களாக திருக்குறள், நாலடியார், திரிகடுகம், மூதுரை, நல்வழி, இனியவை நாற்பது, விவேகசிந்தாமணி போன்றவற்றை குறிப்பிடலாம்.

விவேக சிந்தாமணி

→ இவ் இலக்கியம் நாயக்கர் காலத்தில் தோன்றியதாக அறியப்படுகின்றது.
→ இதன் ஆசிரியர் யாரென இது வரை அறியப்படவில்லை
பல வகையான சுவை மிக்க பாடல்களை தன்னகத்தே கொண்டமைந்த நூல் இதுவாகும்.

அறிவுடையோர் செயலும், அறிவற்றோர் செயலும்

பாடல் [சந்தி பிரித்த பின்]

தண் தாமரை உடன் பிறந்தும் தண் தேன்
நுகரா மண்டுகம்
வண்டோ கானகத்து இடையிருந்து வந்து
கமல மது உண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங்கு உறவாடித் தம்மில்
கலப்பர் கற்றோரே.

அரும்பத விளக்கம்

1. தண் தாமரை	–	குளிர்ச்சி பொருந்திய தாமரை
2. மண்டுகம்	–	தவளை
3. தண் தேன்	–	தாமரையிலுள்ள தேன்
4. நுகரா	–	உண்ணாது
5. கானகம்	–	காடு
6. கமலம்	–	தாமரை
7. மது	–	தேன்
8. புல்லர்	–	அறிவில்லாதவர்

பொருள்

தவளையானது குளிர்ச்சி பொருந்திய தாமரையின் உடன் பிறந்திருந்தாலும்/வசித்தாலும் அத் தாமரை மலரிலுள்ள குளிர்ச்சியான தேனை உண்ணாது. ஆனால் வண்டோ காட்டில் இருந்து வந்து அம் மலரிலுள்ள தேனை விரும்பி உண்ணும். அது போல நீண்ட நாட்கள் பழகி இருந்தாலும் அறிவில்லாதவர்கள் நல்லவர்களின் உயர்குணங்களை அறிய மாட்டார்கள். எனினும் அறிவுடையோர் நல்லவர்களை கண்டதும் அவர்களின் குணங்களை உடனே அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அவர்களுடன் உறவாடி ஒன்று பட்டு கலந்து வாழ்வர்.

www.kodu.lk

✍ குறு வினாக்கள்

01. " தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டூகம்...

அ. இங்கு மண்டூகம் என்பதன் கருத்து யாது?

✶ தவளை

ஆ. தண்டாமரை என்பதன் பொருள் யாது.?

✶ குளிர்ச்சி பொருந்திய தாமரை

02. " பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லர் நல்லோரை...

அ. இங்கு புல்லர் எனக் குறிப்பது யாரை?

✶ அறிவற்றவரை /அறிவில்லாதவரை

ஆ. அறிவில்லாதவர் செயல் எவ்வாறு வெளிப்படுகிறது?

✶ நீண்ட காலம் பழகி இருந்தாலும் நல்லவர் குணங்களை அறியமாட்டார்கள்

03. வண்டோ கானகத்து இடையிருந்து வந்து
கமல மது உண்ணும் ..

அ. கானகம் என்பது குறிக்கும் கருத்து யாது?

காடு

ஆ. கமலம் என்பதன் ஊடாக வெளிப்படும் பொருள் யாது?

தாமரை

03. இப்பாடலில் அறிவுடையோர், அறிவற்றோர் செயல்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

☞ **அறிவுடையோர் செயலானது நல்லவர்களை கண்டவுடன் அவர்களின் குணங்களை அல்லது நல்ல இயல்புளை அறிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் அவர்களிடம் உறவாடி தம்மில் கருத்து ரீதியில் ஒன்றுபடுவர்.**

☞ **அறிவற்றோர் செயலானது நீண்ட காலம் பழகி இருந்தாலும் நல்லவர்களின் உயர் குணங்களை அவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள். அத்துடன் நல்லவர்களோடு உறவாடவும் மாட்டார்கள்.**

04. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?

➢ **அறிவில்லாதவர் செயலானது தவளையின் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது**

உவமானம் – தவளை
உவமேயம் – அறிவில்லாதவர்
பொதுத்தன்மை – அறியாமை

www.ikeou.lk

➢ அறிவுடையவர் செயலானது வண்டின் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் – வண்டு
உவமேயம் – அறிவுடையவர்
பொதுத்தன்மை – அறிவுடைமை

05. பாடலில், தவளை, வண்டு என்பவற்றின் இயல்புகள் எவ்வாறு புலப்படுகின்றன?

ᵔ தவளை – நீர் நிலையில் தாமரையுடன் ஒன்றாக இருத்தாலும் தாமரையில் உள்ள தேனை அருந்தாது.

ᵔ வண்டு – காட்டில் இருந்து வந்து தாமரையில் உள்ள தேனை அருந்தும்.

வெற்றிவேட்கை

→ இந் நூல் அதிவீரராம பாண்டியனால் இயற்றப்பட்டது.

→ இந் நூல் நறுந்தொகை எனவும் அழைக்கப்படுகின்றது.

பாடல் (சந்தி சீர் பிரித்து பின்)

தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை
வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவருக்கு இருக்க நிழலாகாதே

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகுமே

அதனால் பெரியோரெல்லாம் பெரியரும் அல்லர்
சிறுயோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

கொண்டு கூட்டும் முறை

பனையின் தேம்படு திரள் பழுத்து ஒரு விதை
வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவருக்கு இருக்க நிழலாகாதே
தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும்
தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை நுண்ணிதே
ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகுமே
அதனால் பெரியோரெல்லாம் பெரியரும் அல்லர்
சிறுயோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

www.ikeou.lk

அரும்பத விளக்கம்

1. தேம்படு – சுவை மிக்க, இனிமை மிக்க
2. திரள் – திரண்ட
3. கயம் – குளம்
4. சினை – முட்டை
5. அண்ணல் யானை – தலைமை மிக்க யானை
5. புரவி – குதிரை

பொருள்

பனை மரத்தினுடைய சுவைமிக்க திரண்ட பழத்தில் உள்ள ஒரு விதையானது வான் உயர வளம் பெற வளர்ந்திருப்பினும் ஒருவர் தங்கி இருக்க நிழல் தராது. குளத்தில் வாழும் சிறு மீனின் முட்டையை விடவும் ஆலமரத்தின் விதையானது சிறியதே. ஆனாலும் அது முளைத்து பெரிய மரம் ஆன பின் யானை, குதிரை, தேர், ஆட்படை முதலியவற்றோடு மன்னன் தங்கி இருக்க நிழல் தரும். எனவே உடல் அமைப்பில் பெரியோர் போல காட்சியளிப்பவர் அனைவரும் பெரியவர் அல்லர். சிறியவர் போல காட்சியளிப்பவர் உண்மையில் சிறியவரும் அல்லர்.

வினாக்கள்

01. " தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்...

அ. இங்கு தேம்படு என்பதன் பொருள் யாது?

✶ சுவை மிக்க இனிமை மிக்க

ஆ. வான் உற ஓங்கி வளம் பெற வளரினும்.. என்பதில் வெளிப்படும் அணி?

✶ உயர்வு நவிற்சியணி

02. " தெள் நீர்க் கயத்து சிறு மீன் சினையிலும் நுண்ணிதே ஆயினும்...

அ. இங்கு கயம் என்பது உணர்த்தும் பொருள் யாது?

குளம்

ஆ. சினை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?

சினை

03. அண்ணல் யானை அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு...

அ. அண்ணல் யானை என்பதன் கருத்து யாது?

✶ தலைமை மிக்க யானை

ஆ. இங்கு வெளிப்படும் நாற்படைகளையும் குறிப்பிடுக?

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை

02. இப்பாடலில் கூறப்படும் நீதிக்கருத்துக்கள் எவை?

இப்பாடலில் வெளிப்படும் நீதிக்கருத்துக்களை நோக்கும் போது,

- உருவத்தில் பெரியவர்கள் எல்லோரும் குணத்தினால் உயர்ந்தவர்கள் அல்லர்
- உருவத்தில் சிறியவர்கள் எல்லோரும் குணத்தினில் தாழ்ந்தவர்களும் அல்லர்

எனும் இருவிதமான நீதிக்கருத்துக்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

03. பனைமரம், ஆலமரம் என்பவற்றின் இயல்புகளை குறிப்பிடுக?

- பனைமரம் – சுவை மிகுந்த பெரிய வித்திலிருந்து வானுயர வளர்ந்திருப்பினும் ஒருவர் இருப்பதற்கு நிழல் தராது.
- ஆலமரம் – மிகச் சிறிய விதையிலிருந்து முளைத்து வளர்ந்திருப்பினும் நாற்படைகளுடன் அரசன் ஒருவன் தங்கி இளைப்பாறுவதற்கு நிழல் தர வல்லது.

04. இப்பாடலில் உள்ள உவமை அணியினைக் குறிப்பிடுக?

→ பனை மரத்தின் உருவம் பெரியவர் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் – பனையின் பெரிய விதை
உவமேயம் – உருவத்தில் பெரியவர்
பொதுத்தன்மை – தோற்றம்

→ ஆல மரத்தின் உருவம் சிறியவர் இயல்புக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் – ஆலமரத்தின் சிறிய விதை
உவமேயம் – உருவத்தில் சிறியவர்
பொதுத்தன்மை – தோற்றம்

வாக்குண்டாம்

→ இந் நூல் ஔவையாரால் இயற்றப்பட்டது.

→ முதுரை எனவும் அறியப்படுகின்றது.

→ இந் நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் வாக்குண்டாம்.. எனத் தொடங்குவதால் இந் நூலுக்கு வக்குண்டாம் எனும் பெயர் வழங்கப்பட்டது.

பாடல்

அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம் – மடைத்தலையில்
ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

கொண்டு கூட்டி வாசித்தல்

கொக்கு மடைத்தலையில் ஓடு மீன் ஓட
உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம்
அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம்

அரும்பத விளக்கம்

1. மடத்தலை – நீர் ஓடும் வாய்க்கால்
2. உறுமீன் – பெரிய மீன்
3. அறிவிலர் – அறிவில்லாதவர்
4. கடக்க – வெல்லுவதற்கு

பொருள்

கொக்கானது நீர் ஓடும் வாய்க்காலில் சிறிய மீன்களை ஓட விட்டு பெரிய மீனானது வரும் வரைக்கும் காத்திருக்கும். அது போல (தமக்கு தகுதியானவர் அல்லது தகுந்த காலம் வரும் வரைக்கும்) அடக்கமுடன் இருக்கும் குணமுடையோரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு முயற்சிக்க வேண்டாம்.

✍ குறு வினாக்கள்

01. " மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு...

அ. இங்கு மடத்தலை என்பதன் கருத்து யாது?

✶ நீர் ஓடும் வாய்க்கால்

ஆ. உறுமீன் என்பதன் பொருள் யாது.?

✶ பெரிய மீன்

இ. இங்கு கூறப்பட்டுள்ள உரிச் சொல் யாது? அது தரும் பொருள் யாது ?

✶ உறு – பெரிய

02. அடக்கம் உடையார் அறிவிலார் என்று எண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டாம்..

அ. கடக்கக் கருத.. எனும் தொடர் தரும் பொருள் யாது?

வெற்றி கொள்ள

ஆ. அடக்கமுடையாரை எவ்வாறு கருதக் கூடாது?

அறிவில்லாதவர் என

02. இப்பாடலில் கூறப்படும் நீதிக் கருத்து யாது ?

இப்பாடலில் வெளிப்படும் நீதிக் கருத்தினை நோக்கும் போது அடக்கமுடையவர்கள் தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் காத்திருப்பர். அதாவது கொக்கு பெரிய மீனின் வருகைக்காக காத்திருப்பதைப் போல அடக்கமுடையாரும் காத்திருப்பார்கள். ஆகவே அவ்வாறு இருப்போரை அறிவில்லாதவர் எனக் கருதி அவர்களை வெல்வதற்கு கருதக்கூடாது எனும் கருத்து புலப்படுத்தப்படுகின்றது. அதாவது,

கொக்கு – சிறிய மீன்களை போக விட்டு பெரிய மீனின் வருகைக்காக காத்திருக்கும்

அடக்கமுடையவர் – தமக்கு தகுதியில்லாதவர்களை போக விட்டு தகுதியான எதிரி வரும் வரைக்கும் காத்திருப்பர்

03. இப் பாடலில், அடக்கமுடையவரின் செயல்/இயல்பு எவ்வாறு காட்டப்படுகின்றது ?

தமக்கான தகுந்த காலம் வரும் வரைக்கும் அல்லது தமது செயல் ஆற்றுவதற்கு தகுந்த சந்தர்ப்பம் வரும் வரைக்கும் அடக்கத்துடன், பொறுமையுடன் காத்திருப்பார்கள். கொக்கு எவ்வாறு பொறுமையோடு காத்திருக்கின்றதோ அதைப் போல அடக்கமுடையாரும் காத்திருப்பர்.

04. இங்கு இடம் பெற்றுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக?

இங்கு உவமையணி இடம் பெற்றுள்ளது.

× அடக்கமுடையவர்களின் செயலானது கொக்கின் செயலுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.

உவமானம் – அடக்கமுடன் காத்திருக்கும் கொக்கு
உவமேயம் – அடக்கமுடையவர்
பொதுத்தன்மை – காத்திருத்தல்

05. கொக்கின் இயல்பு எத்தகையது எனப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

நீர் ஓடும் வாய்க்காலில் சிறிய மீன்களை ஓட விட்டு பெரிய மீன் வரும் வரைக்கும் வாட்டமுடன் காத்திருக்கும். அதாவது தன் உணவுக்கு தகுந்த பெரிய மீன் வரும் வரை பொறுமையோடு இருக்கும் என்பதன் ஊடாக கொக்கின் இயல்பு இங்கு காட்டப்படுகின்றது.

தீர்கடுகம்

→ இந் நூல் சங்கமருவிய காலத்தில் தோன்றியது.

→ பதினென் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்குவது.

→ நல்லாதனாரால் இது இயற்றப்பட்டது.

→ மருத்துவப் பெயரால் அமையப் பெற்ற நூலாக இது அறியப்படுகின்றது.

பாடல் (சந்தி பிரித்து மின்)

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் பார்த்து உண்ணும்
தன்மை இலாளர் அயல் இருப்பும் இம் மூன்றும்
நன்மை பயத்தல் இல

அருஞ்பத விளக்கம்

1. கணக்காயர்	– ஆசிரியர், ஓதுவிப்பவர்
2. பிணக்கு	– மாறுபாடு, குழப்பம்
3. அவைக்களன்	– சபை கூடும் இடம்
4. அயல் இருப்பு	– பக்கத்தில் இருத்தல்
5. பயத்தல்	– தருவது, கொடுப்பன
6. மூத்தோர்	– முதியோர், பெரியோர்

பொருள்

அறிவு நூல்களைக் கற்றுத் தரும் ஆசிரியர்கள் இல்லாத ஊரும், மனிதர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை நீக்கும் அறிவும் அனுபவமும் கொண்ட பெரியோர்களை கொண்டிராத சபையும், மற்றவர்களுக்கு கொடுத்து உண்ணாத குணமுடையவர்கள் அருகில் இருத்தலும், இம் மூன்றும் ஒருவருக்கு நன்மையை தராது.

✍ வினாக்கள்

01. " கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்...

அ. இங்கு கணக்காயர் எனக் குறிப்பது யாரை?

✶ ஆசிரியர்

ஆ. அவைக்களன் என்பதன் பொருள் யாது?

✶ பெரியோரை கொண்டிருக்கும் சபை

இ. மூத்தோரிடம் எதிர்பார்க்கப்படும் கடமை யாது?

✶ பிரச்சனையை தீர்த்து வைத்தல்

02. இப்பாடலின் பிரதான கருத்து யாது?

ஆசிரியர் இல்லாத ஊர், முதியவர்கள் இல்லாத சபை, உணவை பகுத்து உண்ணாதவர் அயல் இருத்தல் என்பன ஒருவனுக்கு நன்மை தருவதில்லை.

03. ஒருவர் வாழ்க்கைக்கு நன்மை தராதவை எவை என கூறப்படுகிறது.?

✶ ஆசிரியர் இல்லாத ஊர்

✶ அறிவும், அனுபவமும் வாய்ந்த மூத்தோர் இல்லாத சபை

✶ உணவை பகிர்ந்து கொடுத்து உண்ணுபவர்கள் இல்லாத அயல்.

04. திரிகடுகம் என்பதன் பொருள் யாது?

திரி என்பது மூன்று கடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்பவற்றை குறிக்கும். இவை உடல் நலத்தை பேண உதவுகவை. இது போல மூன்று நீதிக்கருத்துக்கள திரிகடுகம் பாடல்களில் இடம்பெற்றிருக்கும். அவை வாழ்க்கையில் உயர்வு பெற உதவுபவை.

முது மொழி வெண்பா

→ இந் நூல் ஷரிபுத்தீன் புலவரால் இயற்றப்பட்டுள்ளது.

→ இந் நூலில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முது மொழியானது இடம்பெற்றிருக்கின்றது.

மனம் கொண்டதே மாவிகை

பாடல் (சந்தி பிரித்த பின்)

உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல் ஒப்பும்
பனையோலைப் பாயில் படுத்து உறங்கும் வாழ்வார்
மனம் கொண்டது மாவிகை

அருஞ்பத விளக்கம்

1. தப்பிய – துவைத்த
2. கந்தை – கிழிந்த ஆடை
3. பீதாம்பரம் – பட்டாடை, பொன்னாடை
4. ஒப்பும் – ஒப்பானது,

பொருள்

உப்பில்லாமல் காய்ச்சிய கஞ்சியை அறுசுவை உணவாக கருதி உண்டும், கிழிந்த ஆடையை தோய்த்து பட்டாடையாக கருதி உடுத்தும், அவை போன்றதான பனையோலையால் இழைக்கப்பட்ட பாயில் படுத்து உறங்கியும் மனத்திருப்தியுடன் வாழ்வார்கள். இவர்களுக்கு மனம் கொண்டதே மாவிகையாகும்.

✍ வினாக்கள்

01. " உப்பிலாக் கஞ்சியினை உண்ணும் அறுசுவை போல்
தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல...

அ. இங்கு உப்பில்லா கஞ்சி எனக் கருதுவது எதனை?

✶ உப்பு இடப்படாத கஞ்சி

ஆ. தப்பிய கந்தை என்பதன் பொருள்?

✶ துவைத்த கிழிந்த ஆடை

இ. பீதாம்பரம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

✶ பட்டாடை

02. இப்பாடலின் பிரதான கருத்து யாது?

ஒருவர்க்கு போதும் எனும் மனநிலையே மன நிறைவைத் தரும். திருப்தியான மனம் கொண்டு வாழ்வோருக்கு அனைத்தும் மன நிறைவைத் தரும். மனம் கொண்டது அவர்களுக்கு மாளிகை போன்றது.

03. இப்பாடலில் மனம் கொண்டதே மாளிகை.. எனும் கருத்து எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

பாடலில் பின்வரும் கருத்துக்கள் வாயிலாக மேற்போந்த மனம் கொண்டதே மாளிகை எனும் தன்மை புலப்படுத்தப்படுகின்றது.

- உப்பில்லாத கஞ்சியினை அறுசுவை உணவாக கருதி உண்ணுதல்
- கிழிந்த ஆடையினை தோய்த்து பட்டாடையாக கருதி அணிதல்
- பனையோலையால் பின்னப்பட்ட பாயில் படுத்து உறங்குதல்.

இவற்றின் வாயிலாக இருப்பதை கொண்டு மனநிறைவோடு வாழுதல் எனும் உயரிய பண்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

04. மனங் கொண்டது மாளிகை எனும் முதுமொழிக்கு நிகரான பழமொழி யாது?

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

நாலடியார்

→ இந் நூல் சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்றதாகும்.

→ நான்கு அடிகளை கொண்டு அமையப் பெற்ற நூல் இதுவாகும்.

→ சமண முனிவர்களால் இந் நூல் இயற்றப்பட்டதாகும்.

→ திருக்குறளுடன் நெருங்கிய தொடர்புடையதாக இந் நூல் அமைவுறுகின்றது.

→ நாலடியாருக்கு உரை எழுதியவர் பதுமனார்.

நல்லவர் நட்பும் தீயவர் நட்பும்

பாடல் [சந்தி பிரித்து பின்]

யானை அனையவர் நண்பு ஒரிஇ நாய் அனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்து அறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்

அரும்பத விளக்கம்

1. அனையவர் – போன்றவர்
2. நண்புஒரிஇ – நட்பினை விளக்கி
3. கேண்மை – நட்பு
4. தழீஇ – தழுவி
5. மெய்யதா – உடம்பில்

பொருள்

யானையைப் போன்றவரின் (பழிதீர்க்கும் குணமுடையவரின்) நட்பினை விலக்கி நாயைப் போன்றவரின் நன்றி காட்டும் குணமுடையவரின் நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும். நீண்ட காலம் பழகியிருந்தாலும் யானையானது பாகனையே கொல்லும். ஆனால் நாயோ தன்னை வளர்ந்தவர் கோபித்து எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கக்கூடியதாக வாலை வளைத்து ஆட்டும்.

வினாக்கள்

01. " யானை அனையவர் நண்பு ஒரீஇ நாய் அனையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்...

அ. இங்கு நண்பு ஒரீஇ என்பதன் கருத்து யாது?

நட்பினை விலக்கி

ஆ. கேண்மை என்பதன் பொருள் யாது?

நட்பு

இ. எத்தகைய நட்பு சிறந்தது எனக் கூறப்படுகிறது?

நாய் போன்ற குணமுடையவர் நட்பு

02. எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்..

அ. மெய்யதா என்பதன் கருத்து யாது?

உடம்பில் உருவி நிற்றல்

ஆ. வால் குழைக்கும் என்பது குறிக்கும் பொருள் யாது?

வால் ஆட்டும்

02. எத்தகைய நட்பினை தழுவிக் கொள்ள வேண்டும் என நாலடியார் கூறுகிறது?

நாய் போன்ற நட்பினை தழுவிக் கொல்ல வேண்டும். ஏனெனில் நாயானது தன் எசமான் கோபம் கொண்டு எறிந்த வேல் தன் உடம்பில் இருக்கும்படியாகவும் வாலை வளைத்து ஆட்டும். அதாவது நன்றிக் குணத்தை நாய் வெளிப்படுத்தும் இயல்பும், பழிவாங்கும் குணமும் கொண்டிராதது நாயாகும். அத்தகு குணமுடையார் நட்பினை பெறுவது சிறப்பாகும் என்பது நாலடியார் கருத்தாகும்.

www.ikeou.lk

03. நாலடியார் எத்தகைய நட்பினை விலக்க வேண்டும் எனக் கூறுகின்றது?

யானை போன்ற நட்பினை நீக்க வேண்டும். ஏனெனில் யானை தன்னை வளர்ந்த பாகனையே கோபம் வந்தால் கொன்று விடும் அதாவது பழி வாங்கும் உணர்ச்சியுடையது. ஆகவே அத்தகைய குணமுடையவர் நட்பினை விலக்கப்பட வேண்டியது அவசியம் என்கின்றது நாலடியார்.

04. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையணிகளை விளக்குக.?

1.. தீயவர் நட்பு யானையின் குணத்தை போன்றது.

உவமானம் – பாகனை கொல்லும் யானை
உவமேயம் – தீயவர் நட்பு
பொதுத்தன்மை – நன்றி மறத்தல்

2. நல்லோர் நட்பு நாயை குணத்தை போன்றது.

உவமானம் – வால் ஆட்டி குலைக்கும் நாய் .
உவமேயம் – நல்லவர் நட்பு .
பொதுத்தன்மை – நன்றி மறவாமை.

இனியவை நாற்பது

→ சங்க மருவிய காலத்தில் தோன்றிய நூல் இதுவாகும்.

→ பூதஞ்சேந்தனாரால் இது இயற்றப்பட்டது.

→ வாழ்க்கையின் இனிமையான செயல்கள் பற்றி கூறியிருப்பது இந்நூலாகும்.

<u>பாடல் (சந்தி பிரித்து பின்)</u>

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே
எள்துணையானும் இரவாதுதான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

<u>அரும்பத விளக்கம்</u>

1. மிக்கார் – அறிவில் சிறந்தவர்
2. எள்துணை – மிகச் சிறிது, எவ்வளவும்
3. ஈதல் – கொடுத்தல்
4. இனிது – இனிமையானது

<u>பொருள்</u>

கற்றவர்கள் முன்னால் தாம் கற்ற கல்வியை எடுத்துரைத்தலும், அறிவில் சிறந்தவருடன் சேர்வதும், எள் அளவும் பிறரிடம் இரவாது (வாங்காது) தான் பிறருக்கு கொடுத்தலை எந்த நிலையிலும் செய்து வாழ்வது இனிமையானதாகும்.

குறு வினாக்கள்

01.கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரை சேர்தல் மிகமான முன் இனிதே..

அ. யாரின் முன்பாக கல்வி உரைத்தல் இனிமையானது?

கற்றவர்கள் முன்பாக

ஆ.யாரை சேர்ந்திருத்தல் மிகவும் இனிமையானது?

அறிவில் சிறந்தவர்கள்

02. " எள்துணையானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது...

அ. எள்துணை என்பதால் கருதப்படுவது?

சிறிதளவு

ஆ. ஈதல் என்பதன் ஒத்த கருத்து யாது?

கொடுத்தல்

02. ஒருவனுக்கு இனிமை தரும் செயல்கள் எவையென கூறப்படுகிறது?

- **கற்றவர் முன்பாக தாம் கற்றி கல்வியை உரைத்தல்**
- **அறிவில் சிறந்த பெரியவர்களுடன் சேருதல்**
- **சிறிதளவும் பிறரிடம் வாங்காது அவர்களுக்கு**

கொடுத்தல்.

கட்டமைப்பு வினா

01. நீதிநூல்களில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் பற்றி எழுதுவீராக?

☞ மேன்மக்களின் நற் குணங்களை அறிந்து அவர்களோடு கருத்துக்கள் ரீதியாக உறவாடி பயன்பெற்று வாழ வேண்டும்.

" தண்டாமரையின் உடன் பிறந்தும்...

☞ உருவத்தில் பெரியவர்களாக இருப்பவர்கள் பெரியவரும் அல்லர், சிறியவர்களாக இருப்பவர்கள் சிறியவரும் அல்லர்.

" தேம்படு பனையின் திரள்...

☞ அடக்கம் உடையவர்கள் தமக்கான தகுந்த நேரம் வரும்வரை காத்திருப்பர். அதனைக் கண்டு அவர்களை அறிவற்றவர்கள் எனக் கருதக் கூடாது.

" அடக்கம் உடையார் அறிவிலர்...

☞ ஆசிரியர் இல்லாத ஊர், பெரியோர் இல்லாத சபை, பகுத்து உண்ணும் பண்பு இல்லாதவர் அயலிருப்பு இவை மூன்றும் நன்மை தருவன அல்ல.

‘‘ கணக்காயர் இல்லாத ஊரும்...

☞ மனத்திருப்தியோடு, மன நிறைவோடு வாழும் வாழ்க்கை மேலானது.

‘‘ உப்பில்லாக் கஞ்சியினை உண்ணு மறு சுவை..

☞ தீயவர் நட்பினை நீக்கி நல்லவர் நட்பினை பேணிக் கொள்ள வேண்டும்

‘‘ யானை அனையவர் நண்பொரீஇ...

☞ அறிவுடையவர்க்கு கற்ற கல்வியை உரைத்தல், அறிவுடையவருடன் சேர்தல், சிறிதளவும் பிறரிடம் வாங்காது அவர்களுக்க கொடுத்தல் வேண்டும்.

‘‘ கற்றார் முன் கல்வி உரைத்தல்...

எனவாறு தொகுத்து நோக்கலாம்.

www.lkedu.lk

→ கட்டுரையாசிரியர் – பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

→ கட்டுரை இடம் பெற்றுள்ள நூல் தொகுப்பு – இலக்கிய வழி

01. குறு வினாக்கள்

1.“ பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்தன
கொழுங்கன லென்ன எழுந்தார்...

அ இங்கு எழுந்தார் எனக் கம்பரால் கூறப்படுபவர்?

✷ இராமன்

ஆ. எழுந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

✷ நாவலர்

இ. கொழுங்கனல் என்பதன் கருத்து யாது?

✷ அக்கினி சுவாலை

2. “ மாக மடங்கலும் மால் விடையும் பொன்னாகமும்
நாண நடந்தார்...

அ நடந்தார் எனக் கட்டுரையாசிரியரால் கூறப்படுபவர்?

✷ நாவலர்

ஆ. மடங்கல் என்பதன் பொருள் யாது?

✷ ஆண் சிங்கம்

இ. இங்கு நாகம் என்பது குறிக்கும் இருவிதமான கருத்து?

✷ பொன் மயமகிய மேரு மலை

ஆண் யானை

3. “ எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை..
எல்லோரும் பிரமித்துப் போனார்கள்...

அ இக் கூற்றைக் கூறியவர் யார்?

✷ நாவலர்

ஆ. இக் கூற்று உரைக்கபட்ட சந்தர்ப்பம் யாது?

✷ பிறிற்றோ கட்சி வெற்றி பெறும் தருவாயில் இருக்கும் போது பிறிற்றோவின் நேர்மையற்ற செயலை சுட்டிக் காட்டுவதற்காக உரைக்கபட்டது.

04. சென்னை சர்வகலாசாலையார் முதன் முதலில் நடாத்திய பி. ஏ பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தவர் இருவரும் யாவர்?

விசுவநாதப்பிள்ளை

தமோதரம்பிள்ளை

www.ikedu.lk

05. இந்த இருவரும் இலங்கை சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்கு போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.. இந்த இருவர் எனப்படுவோர் யாவர்?

சேர். போன். இராமநாதன்

பிறிற்றோ

06. அன்று நடைபெற்ற கூட்டத்திற்கு கட்டுரையாசிரிய் வைத்த பெயர் யாது?

வாதமகா சபை

07. அன்றை அக் கூட்டத்திற்கு தலமை தாங்க வேண்டியவர் யார்? தலமை தாங்கியவர் யார்?

தலமை தாங்க வேண்டியவர் – ஆறுமுகநாவலர்

தலமை தாங்கியவர் – விஸ்வநாதப்பிள்ளை

08. விலகு பிள்ளை என நாவலரால் குறிப்பாக விளிக்கபட்டவர் யார்?

விஸ்வநாதப்பிள்ளை

09. பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்கின்ற... இங்கு பிரசண்ட மாருதம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

புயல் காற்று, பலத்த காற்று

10. நல்லூர் கந்தசுவாமி கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது...

அ. கோயிலாருக்கு ஏற்பட்டாளர் யார்?

பிறிற்றோ

ஆ. பிராமணர்களுக்கு ஏற்பட்டாளர் யார்?

நாவலர்

11. அவர் தனது வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்து விட்டு பாடஞ் சொல்வது வழக்கம்..

அ. இங்கு அவர் எனப்படுபவர் யார்?

அருணந்தி சிவாச்சாரியார்

ஆ. ஆவாகனம் என்பது குறிக்கும் கருத்து யாது?

பிரித்து வைத்தல், தனியாக எடுத்து வைத்தல்

12. ஆறுமுகநாவலரின் ஆசிர்வாதத்தால் இலங்கை சட்டசபையில் அங்கத்துவம் பெற்றவர் யார்?

சேர். பொன். இராமநாதன்

www.lkedu.lk

02. இக் கட்டுரையில், கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் யார் யாரென கூறப்பட்டுள்ளது?

- கல்விமான்கள்
- பிரபுக்கள்
- சைவக் குருமார்கள்
- உபாத்தியார்கள்
- சட்ட நிபுணர்கள்
- பிரபல்யமானவர்கள்
- வழக்கறிஞர்கள்

03. கூட்ட மண்டபத்தில் நாவலர் இருந்த நிலையை கட்டுரையாசிரியார் எவ்வாறு காட்டுகிறார்?

நாவலர் அவர்களுக்கு அன்றைய தினம் காச நோய் என்ற படியினால் அன்றைய கூட்டத்திற்கு தலமை தாங்காது, மண்டபத்தில் அமர்ந்திருந்து கூட்ட நடமுறைகளை அவதானித்துக் கொண்டிருந்தார். அவ்வகையில், மண்டபத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் அதன் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங் கைகளால் நெற்றியினை தாங்கிய படி இருந்து கூட்ட நடமுறைகளை அவதானித்துக் கொண்டிருந்தார்.

04. வாத மகா சபை வருணிக்கப்படும் தன்மையினை குறிப்பிடுக?

☞ இரு தரப்பினருக்கும் இடையில் ஆவேசமான வாதப்பிரதி வாதங்கள் நடந்தன. மின்னல்கள் , முழக்கங்களைப் போல அவை எதிரொலித்தன.

☞ ஒரு போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட கருவிகள், ஆயுதங்கள் போன்று பலவிதமான கருத்துக்கள் வாதிடப்பட்டன.

☞ கைவேல், எறிகின்ற வேல், இறகுள்ள அம்பு, இறகில்லாத அம்பு, வாள், சக்கரம் இவற்றிற்கு மேலதிகமாக தெய்வப்படைகளிலும் கைவைக்கின்ற சமயம், அதாவது தீவ்ய அஸ்திரங்களை பயன்படுத்த வேண்டிய சமயம் எனவாறு வாதமகாசபையில் நடைபெற்ற வாதப்பிரதி வாதங்கள் விளங்கின.

04. நாவலர் நேர்மை மற்றும் திறமை என்பன பற்றி குறிப்பிடுக?

இக் கட்டுரையில் நாவலர் அவர்களில் நேர்மை மற்றும் திறமை பற்றிய பதிவினை பண்டிதமணி அழகுற எடுத்துரைத்துள்ளார்.

✍ நேர்மை

✷ கோயில் பிரச்சனையில் பிராமணர்களை ஆதரித்து பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்க தவறான வழியில் செல்லாமை.

✷ பிறிற்றோவின் நேர்மையற்ற செயலை ஆதாரத்துடன் வெளிப்படுத்தியமை

✷ நேர்மையான ஒருவரை சட்டசபைக்கு அனுப்ப எண்ணியமை

✷ பிறிற்றோவின் வேண்டுகைக்கு உடன்படாமல் இருந்தமை

✍ திறமை

✷ விசுவநாதப்பிள்ளையின் விருப்பத்திற்கு ஆளாகியமை
✷ விசுவநாதப்பிள்ளையின் தலமையில் கூட்டத்தை நடத்தியமை
✷ தொய்வு வருத்தம் என்ற போதிலும் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக் கொண்டிருந்தமை
✷ பொருத்தமான நேரத்தில் ஆதாரத்துடன் பிறிற்றோவின் தவறை சுட்டிக் காட்டியமை
✷ தன் கட்சி தோல்வியுறும் சமயத்தில் அக்கினியை போல எழுந்தவர்
✷ தன்னுடன் ஒருவர் ஒருவராகவோ அல்லது பலராகவோ கூட்டம் கூட்டமாகவோ விவாதத்திற்கு வரலாம் எனக் கூறிய துணிவுடையவர்
✷ தகுதியான ஒருவரை சட்டசபைக்கு நியமித்தமை.

இவ்வாறு நாவலரின் நேர்மையும், திறமையும் புலப்படும் தன்மையினை கண்டு கொள்ளலாம்.

05. நாவலர் தோற்றப் பொலிவு பற்றி கட்டுரையில் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

நாவலர் அவர்களின் தோற்றப் பொலிவு குறித்து பண்டிதமணி பின்வருமாறு காப்பியம் செய்வதை காண்போம்.

✷ கம்பீரமான தோற்றம்
✷ வீறு கொண்ட பார்வை
✷ எண்ணங்களில் வேகம்
✷ கம்பீரமான நடை
✷ அக்கினி போன்ற எழுகை
✷ பெருமை மிக்கதான நடை

மேலும்,
✷ விஸ்வாமித்திரர் குறிப்பை ஏற்று எழுந்த இராமனை போல் நாவலர் எழுந்தார்.
✷ இராமன் வில்லை நோக்கி நடந்து சென்றதைப் போல நாவலரும் விவாத மேடை நோக்கி நடந்தார்.
என்பனவும் நாவலரின் தோற்றப் பொலிவினை அழகுற எடுத்துக் காட்டுகின்றன.

06. பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள் என கட்டுரையில் காட்டப்படுபவை யாவை?

பிறிற்றோ வாதம் செய்வதில் தலை சிறந்தவர் எனினும் அவரது நேர்மையற்ற செயல்கள் என பண்டிதமணி காட்டுகின்ற தன்மையினை நோக்கும் போது,

✷ தன் கட்சிக் காரர்களான கோயிலாரை ஏமாற்றத் துணிந்தமை.
✷ யாழ்ப்பாணத்தில் நாவலாருக்கு இருக்கும் செல்வாக்கினை உணர்ந்து நாவலர் தனக்கு சார்பாக இருந்தால் நாவலர் பக்கம் வழக்கை நடாத்தி வைப்பதாக கூறியமை.
✷ தன் மன எண்ணத்தை அந்தரங்க நண்பர்கள், கடிதம், தந்தி என்பவற்றின் மூலம் நிறைவேற்றி சட்டசபை உறுப்பினராக வர விரும்பியமை.

✷ நேர்மையற்ற செயல் மூலம் சட்டசபைக்கு வர முற்பட்டமை

இவ்வாறு பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள் காட்டப்பட்டுள்ளது.

07. நாவலர் எழுந்த விதம், நடந்து சென்ற தன்மை என்பன எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது? (கம்பரின் காட்டுதலை உதாரணப்படுத்தி விளக்குக)

✍ நாவலர் எழுந்த விதம்

✷ நாவலர் எழுந்த நிலை இராமாயணத்தில் இராமனது கதாபாத்திரத்திற்கு இணையானதாக பண்டிதமணி காட்டுகிறார். அதாவது விஸ்வாமித்திரர் சிவதனுசை வளைக்கும் படி ஒரு பார்வை மூலம் இராமனுக்கு ஆணை பிறப்பிக்கின்றார். விஸ்வாமித்திரருடைய பார்வையாகிய நெய்யாகுதியை அடுத்து அக்கினிச் சுவாலை வெளிப்படுவதனைப் போல இராமன் எழுந்தார் என கம்பர் அந்நிலையினை காட்டுகிறார். அது போல நாவலரும் தன் நிலையிலிருந்து எழுந்தார் என கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

இதனை.

" பொழிந்த நெய்யாகுதி வாய்வழி பொங்கி எழுந்தன
கொழுங்கன லென்ன எழுந்தார்... எனவாறு காணலாம்.

✍ நாவலர் நடந்த விதம்

✷ மிதிலை நகரின் மிகப் பெரும் சபையில் யாரும் எதிர்பாராத சமயத்தில் கம்பீரமான ஓர் நடை நடந்து சென்றார் இராமன் வில்லை நோக்கி, அதைப் போலவே கூட்ட மண்டபத்தில் நாவலர் அவர்கள் நடந்து சென்றார்.

அதாவது இராமனின் நடையை கண்டு பெருமை மிக்க ஆண்சிங்கமும், பெரிய இடபமும், பொன்மலையாகிய மேருவும், யானையும் இவையனைத்தும் நாணமடைந்ததாம். அது போல பெருமை மிக்க பல அ ம்சங்கள் நாணம் அடையும் படியாக நாவலர் எழுந்து விவாத மேடை நோக்கி நடந்து சென்றார் எனக் கட்டுரையாசிரியர் அழகுற அந்நிலையினை கூறுகின்றார்.

08. இக் கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை ஆராய்க?

இக் கட்டுரையை சிறந்த முறையில் வாசகரிடையே கொண்டு சேர்ப்பதில் கட்டுரையாசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் பல உத்திகளை கையாண்டுள்ளார். அவ் வகையில் அவற்றை அவரது மொழிநடைச் சிறப்புக்களாக நாம் எடுத்து நோக்கலாம்.

✷ அனைவரும் விளங்கிக் கொள்ளக் கூடியதான எளிமையான மொழிநடையினை கையாண்டுள்ளார்
✷ சிறிய சிறிய சொற்பிரயோகங்களை கட்டுரையில் பயன்படுத்தியுள்ளமை
✷ தமிழ் மொழியோடு பிறமொழிச் சொற்களையும் இணைத்திருத்தல் உதாரணமாக இருதயம், அங்க வஸ்திரம், ஆகுதி, சொரூபம் முதலிய வடமொழிச் சொற்கள். அத்தோடு அப்பீல், பி.ஏ முதலிய ஆங்கில மொழிச் சொற்கள்.
✷ கட்டுரையில் உவமை, உருவ அணிகளை பயன்படுத்தியிருத்தல்.
✷ இதிகாச கதையினையும், அதில் உள்ள பாடலடிகளையும், பாத்திரங்களையும் கட்டுரையில் கையாண்டுள்ளமை
✷ இலகுவான, சாதாரண பேச்சு வழக்குச் சொற்களை இணைத்திருத்தல். உதாரணம் – விலகு பிள்ளை, அது கிடக்க

பிள்ளைக் காதல்

பாடல் 01

நீரெடுத்து வருவதற்கு அவள் மணி
நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்
போர் எடுத்து வரும் மதன் முன் செல
போகும் வேளை அதற்குத் தினம் தோறும்
வேர் எடுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்த்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீர் எடுத்த புலை உயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல் போல்.

அரும்பத விளக்கம்

1. நித்திலம் – முத்து
2. மதன் – மன்மதன்
3. சீர் – புகழ்
4. புலையுயிர் – உயிர்க்கொலை
5. சாரர்கள் – பகைவர்கள், படைவீரர்கள்

பொருள்

நீர் எடுத்து வருவதற்காக செல்லும் அவளது அழகிய முத்துப் போன்ற புன்னகை பிரகாசிக்க, மன்மதன் காதல் போர் தொடுத்து அவளைக் கண்டவர் காதல் கொண்டு மயங்கும் படியாக முன் சென்றான். இவ்வாறு ஒவ்வொரு நாளும் அவள் செல்லும் வழியில், சுதந்திரம் எனும் நற்பயிரை வேரோடு அழிக்க முற்படும் உயிரைக் கொல்லும் படை வீரர்கள் தேச பக்தர்களை அழிப்பதற்கு வருகைக்காக காத்திருப்பதைப் போல நானும் அவளின் வருகைக்காக காத்திருந்தேன்.

பாடல் 02

காத்திருந்து அவள் போம் வழி முற்றிலும்
கண்கள் பின்னழகு ஆர்த்து களித்திட
யாத்த தேர் உருளைப்படு மேழைதான்
யாண்டு தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என
கோத்த சிந்தையோடு ஏகி அதில் மகிழ்
கொண்டு நாள்கள் பல களித்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்
புலன் அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்

அரும்பத விளக்கம்

1. பின்னழகு ஆர்த்து – பின்னழகை ஆராய்ந்து
2. மேழை – சிறிய விலங்கு
3. யாத்த – உருவாக்கிய
4. ஜோதி – பிரகாசம், ஒளி
5. வதனம் – முகம்

பொருள்

அவள் செல்லும் போது காத்திருந்து, அவள் செல்லும் வழியெல்லாம் எனது கண்கள் அவளது பின் அழகினை ஆராய்ந்து மகிழ்ச்சி கொள்கிறது. உருவாக்கப்பட்ட உருளுகின்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட்ட சிறிய விலங்கு அச் சக்கரத்தோடு சேர்ந்து சுழல்வதனைப் போல அவளது சிந்தனையோடு சுழன்று அதில் மகிழ்ச்சி கொண்டு பல நாட்களைக் கழித்தேன். அவளது பிரகாசமான முகமானது திரும்பி என்னைப் பார்த்தால் புலன்கள் அழிந்து புதுப்பிறவியை நான் அடைவேன்.

பாடல் 03

புலங்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்கள் ஏது விரும்புவன் அங்கு அவை
நண்ணுறப் பெறல் திண்ணம் தான் என
இலங்கு நூல் உணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்று அது மெய் எனத் தேர்ந்துளேன்
விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே.

அரும்பத விளக்கம்

ஆவி	– உயிர்
போந்து	– சேர்ந்து
நலன்கள்	– நன்மைகள்
திண்ணம்	– உறுதி
இலங்கு	– விளங்கும்
விலங்கியற்கை	– விலங்கின் குணம்
விண்ணுறல்	– சொர்கம், வானுலகம் அடைதல்

பொருள்

ஐம்புலன்களோடு மனமும், உயிரும் ஒன்றுபட்டு விருப்பத்துடன் மனிதன் நலன்களை விரும்புவான் எனில் அவன் விரும்பும் நலன்களை அடைவது உறுதியாகும். என்று நூல்களை கற்று உணர்ந்த முனிவர்கள்/அறிஞர்கள் கூறியுள்ளனர். நானும் இதனை உண்மையென அறிந்துள்ளேன். அங்கும் இங்கும் அலைகின்ற விலங்கின் குணங்கள் இல்லை எனில் நாம்அனைவரும் விரும்பும் போது சொர்க்கத்தினை அடையலாம்.

பாடல் 04

சூழும் மாய உலகினில் காணுறும்
தோற்றம் யாவையும் மானதம் ஆகுமால்
ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்று உள்ளதேல்
அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்
தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்
தாவித் தாவி பலபொருள் நாடுவோர்
வீழும் ஓர் இடைபூற்றினுக்கு அஞ்சுவோர்
விரும்பும் யாவும் பொறார் தாம் இவர் தாமன்றே.

அரும்பதம்

1. மாயஉலகம் – போலி உலகம், பொய் உலகம்
2. மானதம் – மனம் விரும்பும்
3. தாழுமுள்ளத்தார் – தாழ்ந்த இழிவான உள்ளமுடையோர்

பொருள்

பரந்த இந்த பொய்யான உலகத்தில் காணும் காட்சிகள் யாவும் நிலையற்றதாகும். இன்று அடி மனதில் தோன்றும் விருப்பம் இருக்குமானால் அதன் பயன் நாளை விளைந்திடும். தாழ்ந்த உள்ளமுடையவர், சோம்பல் உடையவர், ஆடு போல் தாவி பல பொருள் நாடுவோர், தமக்கு ஏற்படும் இடைஞ்சலுக்கு அஞ்சுவோர், இத்தகையவர்கள் தாம் விரும்பும் எதனையும் பெறமாட்டார்கள்.

பாடல் 05

விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியினில் புலை நாத்திகம் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார்
கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்.

அரும்பதங்கள்

1. வெகுளி – கோபம்
2. நிந்தித்தல் – இழிவாக பேசுதல்
3. மதி – புத்தி, மனம்
4. நாத்திகம் – கடவுள் இல்லையென கூறுதல்
5. கதி – வீடுபேறு, முக்தி
6. திகைப்பர் – வருந்துவர், பிரமிப்பர்

பொருள்

தலைவிதியை நினைத்து வருந்துவோர், தம் நண்பரைத் தூற்றுவோர், கோபம் கொண்டு பகைவர்களை இழிந்துரைப்போர், சூழ்ச்சிகள் செய்வோர், சாஸ்திரங்களை நம்புவோர், தம் அறிவினால் கடவுளையே இல்லையென்று கூறுவோர் இவர்கள் கலக்கமில்லாத நிறைவான விருப்பமே நற்கதியினை தரும் என்பதை உணராது கண் இல்லாதவர் போல வாழ்வர்.

www.ikedu.lk

01. குறு வினாக்கள்

1. " நீரெடுத்து வருவதற்கு அவள் மணி
நித்திலப் புன்னகை சுடர் வீசிடப் போர்...

அ. நித்திலம் என்பதன் பொருள் யாது?

* முத்து

ஆ. இங்கு வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

* உவமையணி – முத்தும் போன்ற புன்னகை

2. " போர் எடுத்து வரும் மதன் முன் செல போகும்
வேளை அதற்குத் தினம் தோறும்...

அ. மதன் எனக் கருதப்படுவது யார்?

* மன்மதன்

ஆ. மன்மதனுடைய செயல் யாது?

* காதல் போர் தொடுத்து முன் செல்லுதல்

3. " யாத்த தேர் உருளைப்படு மேழைதான் யாண்டு
தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என...

அ. மேழை என்பதன் பொருள் யாது?

* கொம்பில்லாத சிறிய விலங்கு

ஆ. யாத்த தேர் என்பதனை விளக்குக?

* உருவாக்கப்பட்ட தேர்

4. " பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலன்
அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்...

அ. வதனம் என்பதன் பொருள் யாது?

* முகம்

ஆ. இங்கு வெளிப்படும் உணர்வு யாது?

* காதல் உணர்வு

5. " புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து
நின்ற விருப்புடன் மானிடன்...

அ. புலங்கள் எனக் கருதப்படுவது?

* ஐம்புலன்கள் – சுவை, உறு,ஒளி, ஓசை, நாற்றம்

ஆ. இங்கு கரணம் எனக் குறிக்கப்படுபவை?

* புத்தி, சித்தம், அகங்காரம்

www.ikedu.lk

6. “ விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே...

அ விலங்கு இயற்கை என்பதன் பொருள் யாது?

* விலங்கின் குணம்

ஆ. விண்ணுறல் என்பதன் கருத்து யாது?

* சொர்க்கத்தை அடைதல்.

7. “ஆடுபோல் தாவித் தாவி பலபொருள் நாடுவோர் வீழும் ஓர்
இடையூற்றினுக்கு அஞ்சுவோர்...

அ ஆடு போல் தாவித் தாவி பல பொருள் நாடுவோர் என்பதன் கருத்து.

* ஆட்டினை போல அங்கும் இங்கும் பல பொருள் மீது .
– விருப்பம் கொள்ளுதல்.

ஆ. இங்கு வெளிப்படும் அணி யாது?

* உவமையணி

8. “ விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்...

அ இங்கு ஒருவர் விரும்பியதை அடைய முடியாமைக்கான காரணங்கள்?

* தலை விதியை நொந்து கொள்ளல்

* நண்பரைத் தூற்றுதல்

ஆ. வெகுளி என்பதன் கருத்து யாது?

* கோபம்

9. “ கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார் கண்ணில்லாதவர்
போல திகைப்பர் காண்...

அ கதி என்பதன் பொருள் யாது?

* நன்மை, வீடுபேறு

ஆ. உவமையணினை குறிப்பிடுக?

* கண் இல்லாதவர்கள் போல திகைத்தல்

10. “ மதியினில் புலை நாத்திகம் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே...

அ மதி என்பதன் கருத்து யாது?

* புத்தி . சிந்தை

ஆ. நாத்திகம் என்பதன் விளக்கம் யாது?

* கடவுள் இல்லையென்று நம்புவோர், கூறுவோர்

www.ikedu.lk

கட்டமைப்பு வினாக்கள்

02. ஒருவர் தாம் விரும்பியதை அடைவதற்கான வழிமுறைகள் எவையென பாரதியார் கூறுகிறார்?

ஒருவர் தம் ஐம்புலன்களையும் அடக்கி மனம், உயிர் முதலியன ஒன்று பட்ட நிலையில் ஒன்றை விரும்பும் போது விரும்பிய நலன்களை கிடைக்கப் பெறுவர். இதனை,

" புலன்களோடு கரணமும் ஆவியும் போத்து நின்ற
விருப்புடன் மானிடன் நலங்களேது விரும்புவன்
அங்கவை நண்ணுறப்பெறல் திண்ணம்...

மேலும், ஒருவர் அங்கும் இங்கும் அலைகின்ற விலங்கின் குணங்களை நீக்கி விரும்பும் நலனை பெற முயற்சித்தால் அது கிடைக்கப்பெறுவர்.

" விலங்கியற்கை இல்லையெனில் யாமெலாம்
விரும்புமட்டினில் விண்ணுறலாகுமே...

எனும் பாடலடிகள் வாயிலாக இத் தன்மையினை காணலாம்.

03.ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள் எவை?

பாரதியார் சுயசரிதை எனும் இப்பகுதியில், ஒருவர் தாம் விரும்புவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்களாக அல்லது இயல்புகளாக பாரதியார் பின்வருவனவற்றை எடுத்துரைக்கின்றார் அவையாவன,

- தாழ்வான மனச்சிந்தனை
- சோம்பல் நிலை, சோர்வு
- தலைவிதியை நோதல்
- ஆடு போல் பல பொருள் நாடுதல்
- நண்பரை தூற்றுதல்
- கோபம் கொண்டு பகைவரை தூற்றுதல்
- கோபம் கொள்ளுதல்
- சூழ்ச்சிகள் செய்தல்
- கடவுளை நம்ப மறுத்தல்
- சாஸ்திரத்தினை நம்புதல்
- பயம் கொள்ளுதல்
- விருப்பமே நற்கதியை தரும் என நம்பாமை.

இவற்றை,

- " தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்
தாவித் தாவி பலபொருள் நாடுவோர் வீழும்
ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர் விரும்பும்
யாவும் பொறார் தாம் இவர் தாமன்றே..

- " விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்...

எனும் பாடலடிகள் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

04. பாரதியாரின் காதல் உணர்வு/மாசில்லாத பிள்ளைக் காதல் பற்றி எடுத்துரைக்க?

இப் பகுதியில் பாரதியாரின் மாசில்லாத பிள்ளைக்காதல் அழகுற வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

✷ முத்துப் போன்ற புன்னகை பிரகாசிக்க நீரெடுப்பதற்காக செல்லும் அவளைக் கண்டவர் காதல் கொள்ளும் படியாக மன்மதன் அவள் முன் காதல் போர் தொடுத்து செல்கின்றான். அதில் தானும் அகப்பட்டதாக பாரதியாரின் காதல் உணர்வு வெளிப்படுகிறது.

✷ அவள் நீரெடுப்பதற்காக செல்லும் வழியில் அவளின் வருகைக்காக தினமும் காத்திருத்தல்.

✷ அவள் செல்லும் வழி முழுதும் அவளது பின்னழகை தன் கண்கள் ஆராய்ந்து அதன் வாயிலாக மகிழ்ச்சி கொள்கின்றது எனக் கூறுதல்

✷ அவளது சிந்தனையில் தன் மனமானது சுழன்று அதன் மூலம் மகிழ்ச்சி அடைந்ததாக பாரதியார் கூறுகிறார். அதாவது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு சுழன்று செல்லும் சிறிய விலங்கினைப் போல தன் மனமும் அவளின் சிந்தனையில் சுழல்கின்றதாம்.

✷ மேலும், அவளது பிரகாசம் பொருந்திய அழகிய முகமானது தன்னை திரும்பி பார்த்தால் தன் ஐம்புலன்களும் அழிந்து மீண்டும் ஓர் புதுப்பிறவியை அடைவேன் என கூறுகிறார் பாரதி.

இவ்வாறு பாரதியாரின் காதல் உணர்வு மற்றும் மாசில்லாத பிள்ளைக்காதல் என்பவற்றை காணலாம்.

05. பாரதியார் சுயசரிதையில் அணி வெளிப்பாடு பற்றி எடுத்துரைக்க.?

<u>உவமையணியின் வெளிப்பாடு</u>

❁ தேசபக்தர்களை அழிப்பதற்கு படைவீரர்கள் காத்திருப்பதை போல அவளின் வருகைக்காக நானும் காத்திருந்தேன்.

உவமானம் – தேச பக்தர் வருகைக்காக காத்திருக்கும் படை வீரர்
உவமேயம் – அவளின் வருகைக்காக காத்திருந்த நான்
பொதுத்தன்மை – காத்திருத்தல்

❁ தேர்ச்சக்கரத்தில் சிறிய விலங்கு ஓட்டிச் செல்வதனை போல என் மனமும் அவள் சொல்லும் வழி முழுதும் செல்லுதல்.

உவமானம் – தேர்ச் சக்கரத்தில் ஒட்டிய விலங்கு
உவமேயம் – அவள் நினைவில் செல்லும் என் மனம்
பொதுத்தன்மை – ஒன்றிணைந்த தன்மை, சுழன்று செல்லல்

❁ ஆடுபோல் அங்கும் இங்கும் தாவிப் பல பொருள் நாடுதல்

உவமானம் – ஆடு போல் தாவுதல்
உவமேயம் – பல பொருள் நாடுவோர்
பொதுத்தன்மை – அலைதல், தேடுதல்

❁ நற்கதிகள் கிடைக்கும் என கருதாதவர்கள்கள் கண்ணில்லாதவர் போல பிரமிப்பர்

உவமானம் – கண் இல்லாதவர்

உவமேயம் – நற்கதி கிடைக்காது எனக் கருதுவோர்
பொதுத்தன்மை – கிடைக்கப்பொறமை

❁ முத்துப் போன்ற புன்னகை கொண்ட பெண்

உவமானம் – முத்து
உவமேயம் – பெண்ணின் புன்னகை
பொதுத்தன்மை – அழகு

இவ்வாறு அணிகளின் வெளிப்பாடு பற்றி இங்கு கண்ணுற முடியும்.

06. பாரதியார் காட்டும் சிறுமியின் அழகு வெளிப்பாட்டினை எடுத்துரைக்குக?

பாரதியார் சுயசரிதையில், தான் கண்ட சிறுமியின் அழகு நலன்களை பாரதியார் அழகுற சித்தரிக்கின்றார். அவற்றை நோக்கும் போது,

❁ நீர் எடுத்து வருவதற்காக தினந்தோறும் சொல்கின்றவள்.

❁ முத்துப் போன்ற புன்னகையை வீசுபவள், அது ஒளி வீட்டுப் பிரகாசித்தல்

❁ மன்மதன் அவள் முன்னே போர் தொடுத்துச் செல்லும் அளவிற்கு அழகுடையவள்

❁ பிரகாசம் பொருந்திய முக வனப்பினைக் கொண்டவள்

❁ ஆராய்ந்து மகிழ்ச்சி கொள்ளும் படியான பின்னழகினைக் கொண்டவள்.

❁ புலன்கள் அழித்து மறு பிறவி அடையக் கூடியதான முக அழகு படைத்தவள்

இவ்வாறு பாரதியார் கண்ட சிறுமியின் அழகு நலன்கள் அழகுற வர்ணிக்கும் தன்மையினை கண்ணுறலாம்.

www.ikedu.lk

அலகு - 04

தனிப்பாடல்கள்

→ தமிழ் இலக்கியத்தில் பல்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பல்சுவை நிரம்பிய பாடல்களின் தொகுப்பு தனிப்பாடல்களாகும். இவை ***தனிப்பாடற்திரட்டு*** எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

→ தனிப்பாடல்கள் பாடிய புலவர்களாக, ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர், படிக்காசுப் புலவர், புகழேந்திப் புலவர், சொக்கலிங்கப் புலவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பாட அலகில் பின்வரும் புலவர்களின் தனிப்பாடல்களை இங்கு நோக்குவோம்.

1. புகழேந்திப்புலவர் பாடல்
2. படிக்காசுப்புலவர் பாடல்
3. காளப்மேகப்புலவர் பாடல்

புகழேந்திப்புலவர் பாடல்

பாடல் - பிறைகள் மூன்று (சந்தி பிரித்த பின்)

பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்தது என்று
சங்கு இட்டு எறிய குரங்கு இளநீர்
தனைக் கொண்டு எறியும் தமிழ்நாடா
கொங்கார்க்கு அமராபதி அளித்த
கோவே இராச குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்
மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே.

அரும்பத விளக்கம்

1. பங்கம்	-	சேறு
2. பழனம்	-	வயல்
3. தமிழ் நாடா	-	தமிழ் நாட்டின் தலைவன்
4. கொங்கார்	-	கொங்க நாட்டவர்
5. அமராபதி	-	சொர்க்க நகரம்
6. வெங்கட் பிறை	-	வெண்மையான சந்திரன்
7. கரும்பிறை	-	மன்மதன் (கரும்பு இறைவன்)
8. அம்பு இறைக்கும்	-	கண்ணீர் சொரியும்

www.ikedu.lk

பொருள் ~ **சேறு பொருந்திய வயலில் உழுகின்ற உழவர்கள் குரங்குகள் பலாக்கனிகளை பறித்து பாழ் செய்கின்றன என்று வயலில் உள்ள சங்குகளை எடுத்து குரங்குகளுக்கு எறிய, அதற்கு குரங்குகள் பழி வாங்க நினைத்து நல்ல இளநீர்களை பறித்து உழவர்கள் மீது எறிகின்ற வளம் பொருந்திய தமிழ் வளங்கும் தமிழ் நாட்டின் (சோழநாடு) தலைவனே, பகைவர்களான கொங்க நாட்டவர்களுக்கு யுத்தத்தில் சுவர்க்க நகரம் (அமராவதி) கொடுக்கின்ற அரசனே, இப் பெண்ணுடைய அழகிய கண்கள் வெண்மையான இளம்பிறைச்சந்திரனுக்கும், கரும்பு வில்லேந்திய மன்மதனுக்கும் மெலிவு அடைந்து கண்ணீர் சொரிகின்றன (இவள் நிலை இரங்கத்தக்கதாகும்)**

01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக

1.." பங்கப்பழனத்து உழும் உழவர் பலவின் கனியை பறித்ததென்று...

அ. இங்கு பழனம் என்பதன் பொருள்?

*** வயல்**

ஆ. பங்கம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

*** சேறு**

2. " கொங்கர்க்கு அமராபதி அளித்த கோவே இராச குலதிலகா.."

அ. இங்கு எந்த மன்னன் சிறப்பிக்கப்படுகின்றான்?

*** சோழ மன்னன்**

ஆ. அமராபதி எனப்படுவது யாது?

*** சொர்க்கலோகம், அதனுடைய தலைநகரம்**

3. " வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும் மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே... "

அ. வெங்கட் பிறை என்பதன் கருத்து?

*** வெண்மையான பிறைச் சந்திரன்**

ஆ. கரும்பு இறை என்பதன் கருத்து?

*** மன்மதன்**

இ. விழிவேல் என்பதில் உள்ள அணி?

*** உருவகம்**

www.lkedu.lk

02. இப் பாடலில் சோழ நாட்டின் வளம் எவ்வாறு வெளிப்படுகின்றது ?

- உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறும் நாடு.
- வயல்களில் சங்கு விளைகின்ற நீர்வளம் பொருந்திய நாடு
- பலாமரங்கள் வயலுக்கு அருகிலே நிறைந்திருத்தல்
- வயலின் அருகிலேயே இளநீர் தரும் தென்னை மரங்கள் காணப்படுதல்
- இனிய தமிழ் வழங்கும் நாடாக விளங்குதல்

03. சோழ மன்னன் வீரம், சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது ?

- வீரம் - போரில் கொங்க நாட்டவரை தோற்கடித்து அவர்களுக்கு மரணத்தை பரிசளிப்பவன் அதாவது சுவர்க்க நகரத்திற்கு அவர்களை அனுப்பிவைப்பவன்.
- சிறப்பு - தமிழ் வழங்கும் சோழ நாட்டின் மன்னன்
- இராஜ குலத் திலகமாக விளங்குபவன்

04. இப்பாடலில் வெளிப்படும் மூன்று பிறைகளும் எவை?

- வெண்கட்பிறை - வெண்மையான இளம் பிறைச் சந்திரன்
- கரும்பிறை - கரும்பு வில் ஏந்திய மன்மதன், கரும்புக்கு இறைவன்
- அம்பிறை - பெண்ணின் கண்ணீர், விழிநீர்

05. இப் பாடலில் பெண் கண்ணீர் சொரிவதற்கான காரணம் யாது?

வெண்மையான பிறைச் சந்திரனுக்கும், காமதேவனாகிய கரும்பு இறைவன் மன்மதனுக்கும் மெலிவு அடைந்து தலைவனைப் பிரிந்த பெண்ணின் விழிகள் கண்ணீர் சொரிகின்றன. அதாவது சந்திரனும், மன்மதனும் அப் பெண்ணை வருத்தவே அவளது வேலாகிய கூர்மையான கண்கள் கண்ணீரை சொரிகின்றன.

06. உழவர்கள் தம் தாகம் தீர்ப்பதற்கு கையாண்ட உத்தி யாது?

உழவர்கள் தமக்கு தாகம் ஏற்படவே, வயலில் உள்ள சங்குகளை எடுத்து குரங்குகள் பலாக்கனிகளை பாழ் செய்கின்றன எனச் சாட்டுக் கூறி எறிந்தனர். உடன் குரங்குகள் அதற்கு பழி வாங்க இளநீர்களை பறித்து உழவர்கள் மீது எறிந்தன. அதன் மூலம் உழவர்கள் தம் தாகத்தினை தீர்த்து கொண்டனர்.

படிக்காசுப் புலவர் பாடல்

பாடல் - சீதக்காதியின் கொடைத் தன்மை

ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு
மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.

அரும்பத விளக்கம்

1. ஒக்க - சமமாக
2. கார் - மழை, மேகம்
3. காரிய போர் - சுயநலவாதிகள்
4. மார் தட்டிய - நெஞ்சு தட்டிய
5. துரைமால் - கொடை வள்ளல்
6. வரோதயன் - வரம் பெற்றவன்

பொருள் - ஒரு தட்டிலே பொன்னும், இன்னொரு தட்டிலே நெல்லும் வைத்து சமப்படுத்தி விற்கும், மழை இல்லாது போன பஞ்ச காலத்திலே தம் சுயநலத்திற்காக யார் தடுத்தாலும் அன்னதானத்திற்கு தட்டுப்பாடு வராமலேயே நான் இருக்கின்றேன் என்று மார் தட்டிய கொடை வள்ளல் சீதக்காதி வரத்தினால் பிறந்தவன்.

01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.

1.. " ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே...

அ. இப் பாடலைப் பாடியவர் யார்?

✠ படிக்காசுப் புலவர்

ஆ. இங்கு கார் தட்டிய என்பதன் கருத்து யாது?

✠ மழை பொய்த்துப் போன

2. " ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு
மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே...

அ. இவ்வடிகளின் சிறப்பிக்கப்படும் மன்னன் யார்?

✠ சீதக்காதி

ஆ. வரோதயன் என்பதால் கருதப்படுவது யாது?

✠ வரத்தினால் பிறந்தவன்

www.ikeou.lk

02. இப் பாடலில் பஞ்ச காலத்தின் கொடுமை எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றது?

பொன்னின் விலையானது அதிகமானது அத்துடன் மதிப்பு மிக்கது, ஆனால் மழை பொய்த்துப் போன பஞ்ச காலத்தில் நெல்லானது பொன் போன்று மதிப்பு மிக்க பொருளாக மாறியது. அதாவது பொன்னுக்கு சமமாக நெல்லும் மதிக்கப்படுகின்றது. இதன் மூலம் நெல்லை வாங்கி உண்ண முடியாத பஞ்ச கால நிலை வெளிப்படுகின்றது. ஏழை மக்கள் நெல்லை வாங்கி தம் பசியை போக்க முடியாத நிலை இங்கு வெளிக்காட்டப்படுகிறது.

ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே.. எனும் அடிகள் அந்நிலையினை தெளிவுறுத்துகின்றது.

03. சீதக்காதி மன்னனின் கொடைத் திறன் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

பஞ்ச காலத்தில் நெல்லின் மதிப்பு உயர்வானது. பொன் போன்று விளங்குவது நெல்லாகும். அவ் வேளையிலும் யார் வந்து தடுத்தாலும் ஏழை மக்களுக்கு அன்னதானம் செய்து மக்களின் பசியைப் போக்கியவன் சீதக்காதி மன்னன். அதாவது பஞ்ச காலத்தில் யாருமே அன்னதானம் செய்ய முன்வர மாட்டார்கள். ஆனால் நான் இருக்கின்றேன் என்று மார் தட்டி மக்களுக்கு உணவளிப்பவன் எனும் வகையில் சீதக்காதியின் கொடைத்திறன் வெளிப்படுகின்றது. இதனை, .

தங்கள் காரியம் பேர் ஆர் தட்டினும் தட்டு வராமலே
அன்னதானத்திற்கு மார் தட்டிய துரைமால் சீதக்காதி வீரோதயனே.எனும் அடிகள் மூலம் காணலாம்.

காளமேகப்புலவர் பாடல் – 01

பாடல் 1- காளமேகம் புறப்பட்டது

கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம் கடலில் உண்டு வழியும் பாதிகை வரையினில் கால் கொண்டு வண் கவிதை மொழியும் புலவர் மனத்தை இடித்து முழங்கி மின்னிப் பொழியும் படிக்கு கவி காளமேகம் புறப்பட்டதே.

அரும்பத விளக்கம்

1. கழியும்	-	விலக்கத்தக்க
2. தள்ளி	-	விலக்கி
3. நன்னூல்	-	நல்ல நூல்கள்
4. வரை	-	மலை
5. வண் கவிதை	-	வனப்பு, அழகிய கவிதை

பொருள் - விலக்கத்தக்க பிழைகளையெல்லாம் விலக்கி, கடல் போன்ற நூல்களை அறிவுக்கு உணவாக உண்டு அருவிகள் நிரம்பி வழிகின்ற பொதிகை மலையிலே நிலை கொண்டு, அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவி மழை பொழியும் படியாக இந்தக் கவி காளமேகம் புறப்பட்டுவிட்டதே.

01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.

1.. " கழியும் பிழை பொருள் தள்ளி நன்னூலாம்
கடலில் உண்டு...

அ. கழியும் பிழை என்பதால் கருதப்படுவது?

✠ விலக்கத்தக்க பொருட் பிழைகள்

ஆ. நல்னூலாம் கடல் என்பதில் உள்ள அணி?

✠ உருவகம் - நன்னூலாகிய கடல்

2. " வழியும் பொதிகை வரையினில் கால் கொண்டு வண்
கவிதை மொழியும் புலவர்...

அ. இதில் பொதிகை வரை என்பது உணர்த்தும் பொருள்?

✠ வரை என்பது மலை. ஆகவே பொதிகை மலை

ஆ. வண் கவிதை என்தால் கருதப்படுவது?

✠ வனப்பு, சிறப்பு மிக்க கவிதை

02. இப் பாடலில் காளமேகப்புலவரின் கவிச் சிறப்பு வெளிப்படும் தன்மை யாது?

விலக்க வேண்டிய பொருட் பிழைகளை நீக்கி அறிவு நூல்களை கற்று கவி பாடுபவர் காளமேகப்புலவர். அவர் வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களின் மனங்களில் ஏறி அவர்களின் காதுகள் செவிடாகும் படி மழையைப் போல கவிகளை பாடும் ஆற்றல் படைத்தவர். அதாவது மற்ற புலவர்களை விடவும் கவி பாடும் ஆற்றல் படைத்தவர் காளமேகப்புலவர் என இங்கு தெளிவாகின்றது.

03. புலவரின் கற்பனைத் திறன் எவ்வாறு வெளிப்படுகின்றது?

இப் பாடலில் இயற்கைக் காட்சியுடன் புலவரின் கற்பனை வெளிப்படுகிறது. முழங்கி, மின்னல் மின்னி, வானம் எவ்வாறு மழை பொழியுமோ அது போல காளமேகப் புலவரும் கவிதை பாடும் ஆற்றலுடையவர் என கூறப்படுகின்றது. அறிவு நூல்கள் பலவற்றை கற்று வனப்பு மிக்க கவிதைகளை ஏனைய புலவர்கள் அச்சம் கொள்ளும் படியாக பாடுவதற்கு கவி காளமேகம் புறப்பட்டு விட்டதே என புலவரின் கற்பனையாற்றல் இங்க வெளிப்படுகின்றது.

பாடல் 2- பாம்பும் எள்ளும் ஒப்பு

ஆடிக் குடத்து அடையும் ஆடும் போதே இரையும்
மூடி திறக்கின் முகம் காட்டும் ஓடி மண்டை
பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்
உற்றிடும் பாம்பு எள்ளு எனவே ஒது.

பொருள் - பாம்பானது படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்து விடும். படம் எடுத்து ஆடும் போது இரையும், குடத்தில் அடைந்த பின் மூடித் திறந்தால் தன் தலையை தூக்கி முகத்தைக் காட்டும். பாம்பு தீண்டினால் விஷம் தலைக்கேறி தலை பரபரக்கும். பாம்புக்கு பிளந்த நாக்கு உள்ளது. இதைப் போலவே எள்ளானது செக்கிலே ஆட்டப்பட்டு குடத்திலே எடுத்து அடைக்கப்படும். செக்கிலே ஆட்டும் போது இரைச்சல் ஓசை உண்டாகும். குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெய் எம் முகத்தைக் காட்டும். எண்ணெய்யைக் தலையிலே தடவினால் தலை பரபரக்கும். எள்ளுக்கும் பிண்ணாக்கு உண்டு. எனவே இவ்வுலகில் உவமையால் பொருந்துகின்ற பாம்பும், எள்ளும் ஒன்றையொன்று ஒத்ததாகும் என்று சொல்லுக.

அருஞ்பத விளக்கம்

1. இரையும் - சத்தம் செய்யும்
2. பிண்ணாக்கு - பிளந்த நாக்கு, பிளவு பட்ட நாக்கு

01. பின்வரும் குறுவினாக்களுக்கு விடை எழுதுக.

1.. “ ஆடிக் குடத்து அடையும் போதே இரையும்
மூடி திறக்கின் முகம் காட்டும்...

அ. இங்கு ஒப்பிடப்பட்ட இரு பொருட்களும் எவை?

* பாம்பு , எள்ளு

ஆ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

* சிலேடை

2. “ ஓடி மண்டை பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்...

அ. பிண்ணாக்கு என்தன் கருத்து யாது?

* பிளந்த நாக்கு

ஆ. பிண்ணாக்கு என்பது பாம்பு, எள்ளு என்பவற்றிற்கு எவ்வாறு ஒப்பாகின்றது?

* பாம்பு - பிளவு பட்ட நாக்கு
* எள்ளு - எள் எண்ணெய் வந்த பின் வரும் பிண்ணாக்கு

3. அ. காளமேகப்புலவரின் இயற்பெயர் யாது?

✷ வரதன்

ஆ. காளமேகப்புலவருக்க வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்?

✷ ஆசுகவி, சிலேடைக்கவி

02. இப்பாடலில் பாம்பு, எள்ளு என்பவற்றின் ஒத்த தன்மைகளை எடுத்துக்காட்டுக?

☞ ஆடிக் குடத்தை அடையும்

➢ பாம்பு - படமெடுத்து ஆடிய பின் குடத்தினுள் சென்று அடைந்துவிடும்

➢ எள்ளு - செக்கிலே ஆட்டப்பட்டு குடத்தினுள் எடுத்து அடைக்கப்படும்

☞ ஆடும் போது இரையும்

➢ பாம்பு - படம் எடுத்து ஆடும் போது இரையும்

➢ எள்ளு - செக்கிலே ஆட்டப்படும் போது இரைச்சல் உண்டாகும்

☞ மூடித்திறக்கின் முகம் காட்டும்

➢ பாம்பு - குடத்தில் அடைத்து மூடிப் பின் திறக்கும் போது தலையை தூக்கி காட்டும்

➢ எள்ளு - குடத்தின் மூடியைத் திறந்தால் எண்ணெய் எம் முகத்தை காட்டும்

☞ ஓடி மண்டை பரபரக்கும்

➢ பாம்பு - தீண்டினால் விசம் தலைக்கேறி தலை பரபரக்கும் .

➢ எள்ளு - எண்ணெய்யை தலையில் வைத்தால் தலையில் பரபர எனும் உணர்வு ஏற்படும்

☞ பிண்ணாக்கு உண்டாம்

➢ பாம்பு - பிளவு பட்ட நாக்கு உள்ளமை

➢ எள்ளு - எள் எண்ணெய் ஊற்றிய பின் பிண்ணாக்காக வருதல்

www.lkedu.lk

கம்பியூட்டர் ~ சிறுகதை

✶ கம்பியூட்டர் சிறுகதையின் ஆசிரியர் – அ. முத்துலிங்கம்
✶ கம்பியூட்டர் சிறுகதை இடம்பெற்றுள்ள நூல் – வடக்கு வீதி

1. " நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா.."

அ. தலபுராணம் என்பதன் கருத்து யாது?

✶ தலம் ஒன்றின் மகிமையை, பெருமையை குறிப்பது.

ஆ. கம்பயூட்டர் என்பதன் தமிழ் வடிவம் யாது?

✶ கணினி

2. "ஒரு முறை கவி காளமேகம் பாஷை தெரியாத திம்மி என்கிற தாசியுடன் இரவைக் கழிக்க வேண்டி வந்ததாம்.."

அ. இங்கு இடம்பெற்றுள்ள புலவரின் பெயர்?

✶ காளமேகப்புலவர்

ஆ. பாஷை என்பதன் பொருள்?

✶ மொழி

3. "முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையை கண்டுபிடித்தேன் கணிப்பொறி என்பது ஒரு இராட்சத வேலைக்காரன்.. "

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

✶ கதையாசிரியாரால், அரவிந்தனின் தந்தையால்

ஆ. இராட்சதம் என்பதன் கருத்து?

✶மிகக் கடினமான, கொடுமையான, பயங்கரம்

4. " அரவிந்தா, அரவிந்தா இங்க வா என்று யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல ஓலமிடுவாள்.. "

அ. இக்கூற்றைக் கூறியது யார்?

✶ அரவிந்தனின் அம்மா மேகலா

ஆ. யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல.. எனும் அடி வெளிப்படுத்தும் கருத்து யாது?

✶ கஜேந்திரன் எனும் யானை விஷ்ணுவை அழைத்தமை. (அதாவது முதலை வாய் அகப்பட்ட கஜேந்திரன் தன்னை விடுவித்துக் கொள்ள அனைத்திற்கு ஆதியாகிய திருமாலை ஆதிமூலமே சரணம் என அபயம் எழுப்பியது)

www.kedu.lk

5. “ இருதுபர்ணன் என்ற அரசன் தமயந்தியின் இரண்டாவது சுயம்வரத்தில் கலந்து கொள்ள தேரில் விரைகின்றான்... ”

அ. இவ்வடிகளில் வெளிப்படும் இலக்கியம் எது?

* நளவெண்பா

ஆ. அதன் ஆசிரிய யார்?

* புகழேந்திப்புலவர்

6. “ இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக்கலையில் கைதேர்ந்ததாக இருந்தது... ”

அ. அட்ச இருதயக்கலையுடன் தொடர்புடையவன் யார்?

* இருதுபர்ணன்

ஆ. அட்ச இருதயக் கலை என்றால் என்ன?

* ஒரே தடவையில் பலவற்றை எண்ணுகின்ற கலை, ஆற்றல்

7. “ என்னுடைய மகன் குவளை மலர் போன்ற கரு நீலக்கண்களை இன்னும் அகல விரித்து.. ”

அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

* உவமைணி

ஆ. இங்கு மகன் என விளிக்கப்பட்டவன் யார்?

* அரவிந்தன்

8. “ விட்டிராதே விட்டிராதே பிடி என்று கத்தினேன்.. ”

ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

* அரவிந்தனின் தந்தையால் அரவிந்தனுக்கு

ஆ. விட்டிராதே என்பதன் எழுத்து வடிவம் யாது?

* விட்டுவிடாதே

9. “ என்னம்மா, நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீர்கள்.. ”

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

* அரவிந்தனால் தாய் மேகலாவுக்கு

ஆ. ட்ரபிள் என்பது குறித்து நிற்கும் பொருள் ?

* இடையூறு, இடைஞ்சல்

10. “ இந்தப் பைல் இங்க எப்படி வந்தது...”

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

* அரவிந்தனின் தந்தையால் மகனுக்கு

ஆ. பைல் என்பதன் தமிழ் வடிவம் யாது?

* கோவை

11. இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம்.. இங்கு சந்தி பிரிக்காத பாடல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

* புரிந்து கொள்வதற்கு கடினமாக இருத்தல்.

12. எமிரோ வோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்.. இக் கூற்றினைக் கூறியது யார்?

* காளமேகப் புலவர்.

13. 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்..

அ. பரணி என்பதால் கருதப்படுவது யாது?

* ஆயிரம் யானைகளை அடக்கி வெற்றி பெற்ற வீரனைக் குறித்துப் பாடப்படுவது.

ஆ. உச்சாடனம் என்பது உணர்த்தும் கருத்து யாது?

* மனப்பாடம் செய்தல்

<u>கட்டமைப்பு வினாக்கள்</u>

1. இச் சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைத் தொடர்களை எடுத்துக் காட்டுக?

இச் சிறுகதையில் அதிகளவில் உவமைத் தொடர்கள் பயிலப்பட்டுள்ளன. அவற்றை நோக்கும் போது,

→ கல்லுளி மங்கன் போல
→ ஆர்மானியப் பெட்டி போல
→ கத்திரிக்கோல் வெட்டுவது போல
→ சந்தி பிரிக்காத பாடல் போல
→ ஆலத்தி எடுக்க நிற்பது போல
→ மீன்குஞ்சு நீந்துவது போல
→ யானை ஆதிமூலத்தை கூப்பிட்டது போல
→ முட்டியில் கள்ளுப் பொங்குவது போல
→ அம்மி பொளிவது போல
→ வண்ணத்துப் பூச்சி பறப்பது போல
→ புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல

எனவாறு உவமைத் தொடர்களை காணமுடிகின்றது.

3. கணிப்பொறியினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

இச் சிறுகதையில் கணிப்பொறி அதாவது கம்பியுட்டர் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகளை கண்ணுற முடியும்.

→ காகிதம் மிச்சமாகும்
→ சுற்றுச்சூழலுக்கு நன்மை ஏற்படுகின்றது
→ திருத்தங்களை ஓரே தடவையில் மேற்கொள்ளலாம்
→ சொற்பிழைகளைக் கண்டுபிடிக்கலாம், திருத்திக் கொள்ளலாம்.
→ சொற்களின் எண்ணிக்கை, பக்க எண்ணிக்கை என்பவற்றை அறியலாம். பிரதி எடுக்க முடியும்
→ பல செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்
→ கணக்குகளை பதிவு செய்து சேமித்து வைக்கலாம்
→ படங்கள் வரையலாம் அத்துடன் கேம்ஸ் விளையாடலாம்

இவையனைத்தும் கணிப்பொறியால் கிடைக்கப்பெறும் நன்மைகளென சிறுகதையில் வெளிப்பட்டு நிற்பவையாகும்.

4. கம்பியூட்டர் வரவால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?

இச் சிறுகதையில் மிகவும் முக்கியமான பகுதி இதுவாகும். கம்பியுட்டர் வீட்டிற்கு வந்ததும் அவர்களது வீட்டிலே பல மாற்றங்கள் ஏற்படுகின்றது. கம்பியுட்டரின் வருகையினால் மொத்தத்தில் அவர்களது வீடு முற்றாகவே மாறிப் போய்விடுகின்றது.

→ அரவிந்தன் படங்களை வரைதல், கேம்ஸ் விளையாடுதல்

→ அரவிந்தனின் தாய் மேகலா வீட்டுக் கணக்கு, சீட்டுக் கணக்குகளை கணணியில் பதிந்து வைத்திருத்தல்

→ கம்பியூட்டர் மொழியில் பேசப் பழகிக் கொண்டமை

→ அரவிந்தனின் நண்பர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருதல்

→ அரவிந்தனின் தந்தை தொலை எனும் தலைப்பில் நீண்ட கதை ஒன்றை கம்பியூட்டரில் எழுதுதல்

→ அரவிந்தன், தாய், தந்தை என பகுதி பகுதியாக பிரித்து கம்பியூட்டரைப் பயன்படுத்தல்

→ புதிதாக பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவதைப் போல கம்பியூட்டரின் வருகையால் வீடு மாறியது.

இவ்வாறு கம்பியுட்டர் வருகையால் வீட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து நோக்க முடிகின்றது.

www.ksou.lk

06. சிறுகதையில் பிரதான பாத்திரங்களில் குணப்பண்புகள் யாவை?

அரவிந்தனின் தந்தை

* கதை சொல்லியாக இடம்பெற்றிருப்பவர்
* கம்பியூட்டர் பற்றிய அறிமுகம் இல்லாதவர்
* அமெரிக்காவில் பணிப்பெண் கேட்ட கேள்விகளால் திணறிப் போனவர்
* கம்பியூட்டர் வகைகளை கண்டு ஆச்சரியம் அடைந்தவர்
* தட்டெழுத்து பொறியில் தேர்ச்சி பெற்றவர்
* தொலை எனும் தலைப்பில் நீண்ட கதை ஒன்றை கணினியில் எழுதியவர்
* கணிப்பொறி பற்றி அரவிந்தனிடம் கேட்டு அறிபவர்
* தன் நண்பரை வீட்டுக்கு அழைத்து தன் சந்தேகங்களை தீர்த்துக் கொள்பவர்.

அரவிந்தன்

* ஒன்பது வயதுடைய சிறுவனாக இடம்பெறுபவன்
* கம்பியூட்டரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவன்
* கம்பியூட்டர் மொழியில் கதைப்பவன்
* கம்பியூட்டரில் ஸ்ரீராம் எழுதியவன்
* கணிப் பொறி பற்றிய விடையங்களை தந்தைக்கு சொல்லிக் கொடுப்பவன்
* கணிப் பொறியில் படங்கள் வரைபவன், கேம்ஸ் விளையாடுபவன்
* பள்ளி வேலைகளை கணினியில் செய்பவன்
* நவீன உலகின் பிரதிநிதியாக கதையில் இடம்பெற்றிருப்பவன்.

மேகலா

* கம்பியூட்டர் வாங்குவதில் விருப்பமுடையவள்
* அரவிந்தனின் தாயாக விளங்குபவள்
* வீட்டிற்கு கம்பியூட்டர் கொண்டுவரப்படும் போது வாசலில் ஆர்வத்துடன் காத்திருந்தவள்
* தெய்வ நம்பிக்கை உடையவள், கணனியில் குங்குமப் பொட்டு வைத்தவள்
* கணிப்பொறியில் கணக்குகள் பதிந்து வைப்பவள்,
* கம்பியூட்டரில் விரைவாக தேர்ச்சி பெற்றவள்

07. கம்பியூட்டர் வீட்டிற்கு வரும் போது நடந்த நிகழ்வுகள் யாவை?

* மனைவி மேகலா ஆலத்தி எடுப்பது போல வாசலில் காத்திருத்தல்
* கம்பியூட்டரை இறக்கி நல்ல காலம் பார்த்து வீட்டுற்குள் கொண்டு செல்லல்
* சாமிக்கு தீபம் காட்டி மேகலா கணினிக்கு குங்குமப் பொட்டு வைத்தல்
* அரவிந்தன் கணினியில் ஓம் ஸ்ரீ ராம் எழுதினான்
* கம்பியூட்டரை தட்டிப் பார்த்தல், எழுதிப் பார்த்தல், அதன் மணத்தை நுகருதல்.

08. இச் சிறுகதையில் வெளிப்படும் நகைச் சுவை உணர்வுகளை எடுத்துக்காட்டுக?

இச் சிறுகதையிலே அதிகமான இடங்களில் நகைச் சுவை உணர்வுகள்இழையோடியுள்ளன. அவ்வகையில் அவை சிறுகதைக்கு வலுச் சேர்க்கின்றன எனலாம்.

✶ கணனியில் ஆண் பெண் பாகுபாடு இருப்பதாக கூறுவதும் அதற்காக கதையாசிரியர் கூறும் விளக்கமும் நகைச்சுவை உணர்வுடையது.

✶ கடைக்காரனின் தோற்றத்தை கூறும் போது, அவன் தலையில் இருக்க வேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தது எனக் கூறுதல்

✶ அமெரிக்காவில் தூண்டில் வாங்கச் சென்ற போது கடையில் நின்ற பெண் கேட்ட கேள்விகளும் அவர் பட்ட பாடும் நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்தல்.

✶ அமெரிக்கா கடைக்கு தூண்டில் வாங்கச் சென்ற போது அங்கு பெண் குதி உயர் காலணியில் நறுக் நறுக்கென்று கத்தரிக்கோல் வெட்டுவது போல நடந்து வந்தாள் எனக் கூறுதல்.

✶ காளமேகப் புலவர் பாசை தெரியாத திம்மியோடு இரவுப் பொழுதை கழித்த சம்பவத்தை நகைச்சுவை உணர்வோடு கூறுதல்

✶ கடைக்காரரும், நண்பரும் உரையாடும் போது எதுவும் தெரியாமல் நின்றிருத்தல்

✶ கம்பியுட்டரின் வகைகளை பலவாறாக கூறும் போது நகைச் சுவை உணர்வு வெளிப்படுதல்

இவ்வாறு பல நகைச் சுவை உணர்வுகள் சிறுகதையின் இடை இடையே இழையோடியுள்ளன.

5. இச் சிறுகதையில் கம்பியூட்டர் எனும் தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி எடுத்துரைக்க?

இச் சிறுகதைக்கு கம்பியூட்டர் எனும் தலைப்பு மிகப் பொருத்தமானதாகும். கலைப்படைப்பு ஒன்றின் கருத்துக்கு ஏற்ப தலைப்பு அமைவது அவசியமாகும். அவ் வகையில் கருப்பொருளுக்கு ஏற்ப நெருக்கமான தொடர்புடையதாக இத் தலைப்பு அமைந்துள்ளது.

கதை முழுவதுமே கம்பியூட்டரே பிரதானமாக இடம்பெறுகின்றது. பிரதான பாத்திரங்களின் செயற்பாடுகள் அனைத்தும் கம்பியூட்டரை மையப்படுத்தியே அமைகின்றன. இன்றைய காலகாட்டத்தில் கம்பியூட்டரின் தேவை எத்தகையது என்பதை இச் சிறுகதை வெளிப்படுத்துவதும், கம்பியூட்டரின் நன்மை, தீமை, படிப்பினைகள் என்பனவும் இங்கு வெளிப்படுவதனால் இச் சிறுகதையின் தலைப்பு பொருத்தப்பாடு உடையது என அறியமுடிகின்றது.

2. சிறுகதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.?

கம்பியுட்டர் எனும் இச் சிறுகதையில் மிகவும் சிறப்பான மொழிநடைச் சிறப்புக்களை கதையாசிரியர் கையாண்டுள்ளார்.

→ எளிமையான சொற்பிரயோகத்தை கையாண்டிருத்தல்

→ சிறுகதையில் தேவைப்படும் இடத்தில் தமிழ் மொழியுடன் ஆங்கில மொழி, வடமொழிச் சொற்களை பயன்படுத்தியிருத்தல்.

ஆங்கிலம் – தியேட்டர், கவுண்டர், பேப்பர், ட்ரபிள்,.
வடமொழி – பாஷை, ஸ்ரீராம், சூட்சுமம், காருண்யம்

→ உவமைத் தொடர்களை சிறுகதையில் அதிகளவில் பயன்படுத்தியிருத்தல்

→ நகைச்சுவை சார்ந்த விடையங்களை சிறுகதையில் இணைத்திருத்தல்

→ இலக்கியக் காட்சிகளை சிறுகதையில் இணைத்திருத்தல்

நளவெண்பா – இருதுபர்ணன் கதை
காளமேகப்புலவர் அனுபவம்

→ உரையாடல் பாங்கில் பேச்சு வழக்கு சொற்களை இணைத்திருத்தல்.

→ வர்ணனைகள், உவமையணி என்பவற்றை பயன்படுத்தியிருத்தல்

→ யாழ்ப்பாணப் பேச்சுவழக்குச் சொற்களை அதிகளவில் கையாண்டிருத்தல்

→ சிறிய சிறிய வாக்கியங்களோடு கதையை நகர்த்திச் சென்றிருத்தல்

→ கதையிலே கதாபாத்திரங்களுக்கிடையில் உரையாடல் தன்மையை கையாண்டிருத்தல்

→ கதையாசிரியர் தாமே கதைசொல்லியாக சிறுகதை முழுவதும் இழையோடுதல்

www.kedu.lk

அலகு - 06

திருக்குற்றாலக் குறவஞ்சி

ஆசிரியர் – திரிகூடராசப்ப கவிராயர்

(பாடல்கள் சந்தி பிரித்த பின்)

பாடல் 01 – மலை வளம்

வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழி எறிந்து வானவரை அழைப்பர்
ககனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேன்அருவி திரை எழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்
குற்றால திரிகூட மலை எங்கள் மலையே.

அரும்பத விளக்கம்

1. வானரம்	-	**ஆண்குரங்கு**
2. மந்தி	-	**பெண் குரங்கு**
3. வான்கவி	-	**தேவர்**
4. வானவர்	-	**தேவர்கள்**
5. கானவர்	-	**வேடர்**
6. காயசித்தி	-	**நோய் தீர்க்கும் மூலிகை**
7. செங்கதிரோன்	-	**சூரியன்**
8. பரிக்கால்	-	**குதிரைக்கால்**
9. தேர்க்கால்	-	**தேர்ச் சக்கரம்**

பொருள் – ஆண்குரங்குகள் பலவகையான கனிகளை பறித்துக் கொடுத்து பெண்குரங்குகளுடன் கொஞ்சும்.அந்தப் பெண்குரங்குகள் உண்ணும் போது கீழே சிந்துகின்ற கனிகளுக்கு வானத்தில் உள்ள தேவர்கள் கெஞ்சிக் கொண்டிருப்பர்.வேடர்கள் தம் கண் பார்வையினால் வானில் உள்ள தேவர்களை கீழே வருமாறு அழைப்பர். வானில் உலாவித் திரியும் சித்தர்கள் கீழே இறங்கி வந்து காயசித்தி மூலிகைகளை வளர்ப்பர். தேன் கலந்த மலையருவிகளின் அலைகளானது வானின் வரை சென்று ஒழுகும். அதில் சூரியனின் தேர்ச்சக்கரமும், தேரில் உள்ள குதிரைகளின் கால்களும் வழுக்கிச் செல்லும். வளைந்த இளம்பிறைச் சந்திரனை தன் சடாமுடியில் கூடிய அழகுடைய திருக்குற்றாலநாதர் எழுந்தருளியிருக்கின்ற சிறப்பு மிக்க மலையே எமது மலையாகும்.

பாடல் 02

முழங்கு திரை புனல் அருவி கழங்கு என முத்தாடும்
முற்றம் எங்கும் பரந்து பெண்கள் சிற்றிலை கொண்டு ஓடும்
கிழங்கு கிள்ளி தேன் எடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பு ஒடித்து வெம்பு தினை இடிப்போம்
செழுங் குரங்கு தேமாவில் பழங்களை பந்து அடிக்கும்
தேன் அலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்கு கொடை மகராசர் குறும்பலவின் ஈசர்
வளம் பெருகும் திரிகூட மலை எங்கள் மலையே.

அரும்பத விளக்கம்

1. திரை - **அலை**
2. புனல் - **நீர்**
3. கழங்கு - **விளையாட்டு**
4. சிற்றில் - **மணல் வீடு**
5. கிம்புரி - **யானை**
6. கொம்பு - **தந்தம்**
7. வெம்பு தினை - **வறுத்த தினை**
8. வெடிக்கும் - **பரவும்**

பொருள் - ஒலி எழுப்புகின்ற அலைகளையுடைய நீர் அருவியானது கழுங்கு விளையாடுவது போல முத்துக்களை சொரிந்து கொண்டிருக்கும். அந் நீர் அருவியானது வேடர் இல்லங்களின் முற்றங்கள் தோறும் பரவிச் சென்று சிறு பெண்கள் கட்டிய சிறு வீடுகளை அடித்துச் செல்லும். மலைச்சாரல்களில் கிழங்குகளை கிள்ளி எடுத்து, தேனடைகளில் இருந்து தேனை எடுத்தும் எம் மலை வளத்தைப் பாடி நடனமாடுவோம். யானைகளின் தந்தம் எடுத்து வறுத்த தினையினை உரலில் இட்டு இடிப்போம். இளமையான குரங்குகள் மாமரத்தில் இனிய கனிகளைப் பறித்து அவற்றை பந்துகளாக அடித்து விளையாடும். தேன் நிறைந்த செண்பக மலர்களின் வாசனையானது வானுலகம் வரை சென்று பரவும். அருட்கொடை வழங்கும் கொடைத் தன்மையுடைய மகராசர் குறும் பலாமரத்தடியில் குடியிருக்கின்ற வளம் பெருகியிருக்கும் மலையே எங்கள் மலையாகும்.

பாடல் 03 – நாட்டு வளம்

சூழ மேதி இறங்கும் துறையில்
சொரியும் பாலை பருகிய வாளை
கூழை வாசம் பலாவினில் பாய
கொழும் பலாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்து ஒரு தாழையில் தாக்க
வரும் விருந்துக்கு உபசரிப்போர் போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்திர சூடர் தென் ஆரிய நாடே.

அரும்பத விளக்கம்

1. மேதி - **எருமை**

2. துறை - **நீர்நிலை**

3. வாளை - **வாளை மீன்**

4. கூழை - **ஒரு வகைப் பலா**

பொருள் - எருமை மாடுகள் கூட்டம் கூட்டமாக இறங்குகின்ற நீர்நிலையில், அவை சொரிகின்ற பாலைப் பருகிய வாளை மீன்கள் மணம் வீசும் கூழைப் பலாவினை நோக்கி பாயும், அதனால் கொழுவிய பலாக்கனிகள் வாழை மரங்களில் மேலே உதிர, அதனால் வாழைகள் சாய்ந்து தாழை மரங்களை தாக்க, வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதைப் போல தாழையானது பூக்களை சோறு போல சொரிய, வாழை தன் குருத்தினை விரித்து அவற்றினை ஏந்தும். இத்தகைய சந்திரகூடரின் தென் ஆரிய நாடு எங்கள் குற்றால நாடாகும்.

பாடல் 04

மாதம் மூன்று மழை உள்ள நாடு
வருடம் மூன்று விளைவு உள்ள நாடு
வேதம் மூன்றும் பலா உள்ள நாடு
விஷேஷம் மூன்றும் குலா உள்ள நாடு
போதம் மூன்றும் நலன் செய்யும் நாடு
புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு
நாதம் மூன்று உருவான குற்றால
நாதர் ஆரிய நாடு எங்கள் நாடே.

அரும்பத விளக்கம்

1. விஷேசம்	-	**கிரியை**
2. போதம்	-	**மனித நிலை (பிறப்பு, வாழ்வு, இறப்பு)**
3. நலன்	-	**நன்மை**
4. புவனம்	-	**பூமி, உலகம்**
5. மூன்று உரு	-	**மும்மூர்த்திகள்**
6. விளைவு	-	**விளைச்சல்**
7. நாதம்	-	**நாத தத்துவம்**

பொருள் -மாதம் தோறும் தவறாமல் மூன்று மழை பொழிகின்ற நாடு, வருடம் மூன்று போகங்கள் விளைகின்ற நாடு, வேதங்கள் மூன்றும் (இருக்கு, யகூர், யாமம்) வேர், மரம், பயன் என மூன்றாக அமைந்த குறும்பலாவை உடைய நாடு. நித்தியம், நைமித்தியம், காமிகம் என மூன்று சிறப்புக்கள் தவறாமல் நடக்கின்ற நாடு. பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய மூன்று நிலைகளிலும் நன்மை தருகின்ற நாடு. மேல், கீழ், இடை என மூன்று உலகங்களிலும் வாழ்பவர்கள் வந்து போற்றுகின்ற நாடு, நாததத்துவத்தின் மெய்ப்பொருளாக அரி, அயன், அரன் ஆகிய மூன்றுருவாக (மும்மூர்த்திகள்) விளங்கும் குற்றலநாதரின் ஆரிய நாடே எங்கள் நாடாகும்.

பாடல் 05

நீங்கக் காண்பவர் சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலின் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சூழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
ஏங்கக் காண்பது மங்கல பேரி
ஈசர் ஆரிய நாடு எங்கள் நாடே

☞ நீங்க, தூங்க, வீங்க, ஏங்க என்பதி ல் எதுகையணி இடம் பெற்றுள்ளது.

அரும்பத விளக்கம்

1. கன்னல் - கரும்பு

2. கொல்லை - முல்லை நிலம், பயிர் நிலம்

3. பேரிகை - முரசு, வாத்தியம்

4. சேர்ந்தவர் - வாழ்கின்றவர்

5. வெடிக்க - பிளக்க

பொருள் - இந்த நாட்டினை வந்து சேர்ந்தவர்கள் நீங்கக் காண்பது தாம் செய்த பாவங்களாகும். இந்நாட்டில் நெருங்கி இருப்பவையெல்லாம் வயல்களில் உள்ள கரும்பும், நெல்லும் ஆகும். இங்கு தொங்கிக் கிடப்பவை எல்லாம் மாம்பழக் கொத்துக்கள். இங்கு சுழன்று கொண்டிருக்க காண்பவை தயிர்கடையும் அழகிய மத்துக்களாகும். இங்கு வீக்கமுடன் காணப்படுபவை அழகிய மங்கையர் மார்பகங்களாகும். இங்கு வெடிக்க காண்பதெல்லாம் தோட்டத்தில் உள் முல்லை அரும்புகளாகும். இங்கு ஏங்கக் காண்பது மங்கலமான பேரிகை ஒலியாகும். இத்தகைய வளங்கள் நிறைந்த ஈசன் குற்றாலநாதருக்கு சொந்தமான நாடே எங்கள் நாடாகும்.

01. குறுவினாக்களிற்கு விடை எழுதுக.

1.. " வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்..."

அ. இங்கு வான்கவிகள் எனப்படுவோர்?

* வானத்தில் உள்ள தேவர்கள்

ஆ. வானரம்,எனபதன் பொருள்?

* வானரம் - ஆண் குரங்கு

இ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

* உயர்வு நவிற்சியணி

2. " கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர் கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்... "

அ. இதில் கானவர்கள் எனப்படுவோர்?

* வேடர்கள்

ஆ. வானவர் என்பதன் கருத்து யாது?

* தேவர்கள்

இ. காயசித்தி என்பதன் மூலம் கருதப்படுவது?

* நோய் தீர்க்கும் மூலிகை

3. “ தேனருவி திரை எழும்பி வானின்வழி ஒழுகும் செங்கதிரோன் பரிக்காலும், தேர்க்காலும் வழுகும்... ”

அ. இங்கு செங்கதிரோன், பரிக்கால், தேர்க்கால் என்பவற்றின் மூலம் புலப்படும் கருத்து?

* செங்கதிரோன் - சூரியன்
* பரிக்கால் - குதிரைக்கால்
* தேர்க்கால் - தேரில் உள்ள சக்கரங்கள்

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

* உயர்வு நவிற்சியணி

4. “ கூனிலிளம் பிறை முடித்த வேணியலங்காரர் குற்றால திரிகூட மலையெங்கள் மலையே... ”

அ. இவ்வடிகளில் கூனிலிளம் பிறை என்பதன் பொருள்?

* வளைந்த இளம் பிறைச் சந்திரன்

ஆ. இங்கு வேணியலங்காரர் எனக் கருதப்படுபவர் யார்?

* சிவபெருமான்

5. “ கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு திணை இடிப்போம்... ”

அ. இதில் கிம்புரி எனக்கருதப்படுவது யாது?

* யானை (பூண் கட்டப்பட்ட யானை)

ஆ. கொம்பு எனப்படுவது இங்கு யாது?

* தந்தம்

6. “ சூழுமேதி இறங்கும் துறையில் சொரியும் பாலை.....”

அ. இங்கு மேதி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?

* எருமை

ஆ. துறை எனக்கருதப்படுவது யாது?

* நீர் நிலை

7. “ வேத மூன்றும் பலாவுள்ள நாடு விஷேச மூன்றும் குலாவுள்ள நாடு... ”

அ. வேதம் மூன்றும் எனப்படுபவை எவை?

* இருக்கு, யசூர், சாமம்

ஆ. இங்கு விஷேசம் எனக் கருதப்படுபவை?

* நித்திய கிரியை, காமிய கிரியை, நைமித்திய கிரியை

www.ikeduk

8. “ போதம் மூன்றும் நலஞ் செய்யும் நாடு புவனம் மூன்று வலஞ் செய்யும் நாடு... ”

அ. இங்கு போதம் மூன்று எனப்படுபவை எவை?

* பிறப்பு, வாழ்வு, இறப்பு

ஆ. இவ்வடிகளில் புவனம் என்பதன் பொருள் யாது?

* உலகம்

* மேல் உலகம் (வானுலகம்)
* நடு உலகம் (பூலோகம்)
* கீழ் உலகம் (பாதாளம்)

9. “ நாத மூன்றுருவான குற்றால நாதர் ஆரிய நாடு எங்கள் நாடே.. ”

அ. இவ்வடியில் நாத மூன்றுரு எனப்படுவோர்?

* விஷ்ணு, பிரம்மா, சிவன்

ஆ. இங்கு நாத மூன்றுருவானவர் யார்?

* குற்றால நாதர்

10. “ நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம் நெருங்கக் காண்பது கன்னலின் செந்நெல்... ”

அ. இங்கு நீங்கக் காண்பது எது?

* சேர்ந்தவர் பாவம்

ஆ. கன்னல் என்பதன் பொருள் யாது?

* கரும்பு

11. திருக்குற்றாலக் குறவஞ்சி எனும் இலக்கியத்தின் ஆசிரியர் யார்?

* திரிகூடராசப்ப கவிராயர்

12. குறவஞ்சி என்பது எவ்வகையான இலக்கிய வடிவத்தை சேர்ந்தது?

* பிரபந்தம் சிற்றிலக்கியம்

13. திருக்குற்றாலக் குறவஞ்சியின் தலைவன், தலைவி யாவர்?

தலைவன் - திருக்குற்றால நாதர்

தலைவி - வசந்தவல்லி

14. குறவஞ்சி என்பதன் பொருள் யாது?

* குறத்திப் பெண்

www.ikedu.lk

02. கட்டமைப்பு வினாக்கள்

01. திருக்குற்றால மலை வளம் பற்றி எடுத்துரைக்குக.?

திருக்குற்றாலக் குறவஞ்சியில் திருக்குற்றால மலை வளம் அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளமையை காணலாம். அவற்றை நோக்கும் போது,

• இனிய சுவையுள்ள மாங்கனிகளை கொண்டுள்ள இனிமையான மாமரங்களை கொண்ட மலை. மேலும் குரங்குகள் தம் துணைகளுக்கு அவ் மாங்கனிகளை கொடுத்து பின் அவற்றை கொஞ்சி விளையாடும் மலையாக விளங்குவது. இதனை பின்வரும் பாடலடிகள் மூலம் காணலாம்.

• தேவர்களும் வந்து உறைவதற்கு விரும்பும் மலை.

• வானத்தில் உலாவித் திரிகின்ற சித்தர் கூட்டத்தினர் அடிக்கடி வந்து காயசித்தி மூலிகை விளைவிக்கின்ற மலை.

• உயரமான மலைகளிலிருந்து தேன் கலந்த அருவிகள் வானின் வழி மேல் எழும்பி வழிகின்ற மலையாக விளங்குவது.

• முழங்குகின்ற அருவிகள் / நீர்வீழ்ச்சியானது முத்துக்களை சொரிகின்ற, அள்ளிச் செல்லுகின்ற மலை.

• வானுலகம் வரை மணம் வீசும் செம்பக மலர்கள் மலர்கின்ற மலை.

• பெண்கள் மணலில் சிறுவீடுகளை கட்டி விளையாடுகின்றதும் அவ் மணல் வீடுகளை நீர் அருவிகள் அடித்துக் கொண்டு செல்லுகின்ற நீர்வளம் மிக்க மலையாகவும் விளங்குவது.

• யானையின் தந்தம் கொண்டு தினையினை இடித்து உண்ணுகின்ற மலையாக விளங்குவது.

• நீர்வீழ்ச்சி, கிழங்கு, தினை, மாம்பழம், தேன் எனும் பலவகையான சிறப்புக்கள் நிறைந்துள்ள மலையாகவும் விளங்குவது.

• திருக்குற்றாலநாதர் எனும் இறைவன் வீற்றிருக்கின்ற மலை.

இவ்வாறு வளைந்த இளம்பிறைச் சந்திரனை தனது சடாமுடியில் தரித்துள்ள திருக்குற்றால நாதர் வீற்றிருக்கின்ற திருக்குற்றால மலையின் சிறப்புக்களை முதல் இரண்டு பாடல்கள் வாயிலாக நாம் இங்கு தொகுத்து நோக்கலாம்.

www.ikeou.lk

02. திருக்குற்றால நாட்டுவளம் பற்றி தெளிவுறுத்துக?

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குற்றால நாட்டு வளமானது மூன்று பாடல்கள் வாயிலாக அழகுற வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனை பின்வருமாறு நோக்கலாம்,

• எருமைகள் கூட்டம் கூட்டமாக நீராடுகின்ற நீர்த்துறைகள் நிறைந்த நாடு. அத்துடன் நீர்நிலைகளில் எருமைகள் சொரிகின்ற பாலை வாலை மீன்கள் அருந்துகின்ற சிறப்பையும் கொண்ட நாடாக விளங்குகின்றது.

• கூழைப்பலா மரங்கள், வாழைகள், தாழைகள் என்பன விளையப் பெற்று செழிப்புற்று விளங்கும் நாடு

• மாதந்தவறாத மூன்று மழை, போகம் தவறாத விளைச்சல், மூன்று வேதங்களை அடிப்படையாக கொண்ட குறும் பலாக்கள், மூவகை வழிபாடுகள், பிறப்பு, இறப்பு, வாழ்வு எனும் மூன்று நிலைகளிலும் நன்மை உண்டாதல் என பலவகை சிறப்புக்களை கொண்டிருக்கும் நாடாகும். இதனை பின்வரும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

மாதம் மூன்று மழையுள்ள நாடு

வருடம் மூன்று விளைவுள்ள நாடு

வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு

வீசேசம் மூன்று குலாவுள்ள நாடு...

• மேலும், மூன்று உலகங்களில் வாழ்பவர்களும் வருகைதந்து வழிபாடு செய்கின்ற நாடாக விளங்குவது.

• நாத மூன்று உருவாக அரன், அயன், அரி எனும் திரிமூர்த்திகளின் ஓர் உருவாகிய சிவபெருமான் குற்றாலநாதர் எனும் பெயரில் வீற்றிருக்கும் நாடு.

• வந்து சேர்பவர்களின் பாவங்கள் அனைத்தும் நீங்கப்பெறும் நாடாக விளங்குவது.

• மேலும் கரும்பும், செந்நெல்லும் நெருக்கமுறக் காணப்படுதல், மாம்பழக்கொத்துக்கள் தூங்கக் காணப்படல், வீடுகளில் தயிர் கடையும் மத்துக்கள் சூழலும் சிறப்பு, கொல்லைப்புறங்களில் முல்லை அரும்புகள் வெடித்தல், எப்போதும் மங்கல பேரிகை ஒலிகள் வெளிப்படுகின்ற நாடகவும் விளங்குகின்றது.

• அழகிய பெண்கள் (மென்மையான பருத்த தனங்களை கொண்டவர்கள்) வாழுகின்ற சிறப்பு மிகுந்த நாடாகவும் விளங்குவது.

இவ்வாறு திருக்குற்றால மலையின் நாட்டுச் வளம் அழகுற இப்பகுதியில் மூன்று பாடல்கள் வாயிலாக வெளிப்படும் தன்மையினை நாம் அறிந்து கொள்ளலாம்.

www.ikeduk

03. திருக்குற்றால நாதர் பெருமைகள் வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?

• வளைந்த இளம்பிறைச் சந்திரனை தனது சடாமுடியில் அணிந்திருக்கின்ற அழகிய திருமேனி கொண்டவர்.

• அருட்கொடை வழங்கும் கொடைத்தன்மையுடைய இறைவனாக குறும்பலா மரத்தினடியில் கோவில் கொண்டிருப்பவர்.

• அழகிய திருக்குற்றால மலையில் வீற்றிருப்பவர்

• அயன், அரி, அயன் ஆகிய மும்மூர்த்திகளின் உருவாக குற்றாலநாதர் எனும் நாமம் கொண்டு வீற்றிருப்பவர்.

• பலவகையான சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட குற்றால நாட்டில் உறைந்திருப்பவர்.

• மூன்று உலகத்தவர்களும் வந்து வழிபடும் குற்றால மலை இறைவன்

04. ஆசிரியரின் கவிச்சிறப்புக்கள்/ மொழிநடைச் சிறப்புக்கள் யாவை?

- ஓசை நயமிக்க சந்தச் சுவையினை பயன்படுத்தியிருத்தல்
- எளிமையான இலகுவான சொற்களை பயன்படுத்தியிருத்தல்
- இசையுடன் பாடத்தக்க வகையில் பாடல்கள் அமைந்திருத்தல்
- உயர்வு நவிற்சியணியை அதிகமாக பாடல்களில் பயன்படுத்தியிருத்தல்
- குற்றால மலையின் இயற்கை வளத்துடன் பக்திச் சுவையினையும் இணைத்திருத்தல்
- இறைவனுடைய பெருமைகள் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை.
- குற்றால நாதரின் மலை வளம், நாட்டு வளம் என்பவற்றை வெளிப்படுத்தியிருத்தல்

05. இப் பாடப்பகுதியில் புலப்படும் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பற்றி எடுத்துரைக்க?

இப் பாடல் பகுதியில் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பற்றி நோக்கிடும் போது, பொதுவாகவே வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் எனும் போது ஒரு சமூகத்தின் வாழ்விடம், உணவு, ஆடை, விளையாட்டு, வழிபாடு, தொழில் முதலிய பல அம்சங்களை குறிப்பிடலாம். இவ்வாறு இப் பாடலின் ஊடாக பண்பாட்டு அம்சங்களை நோக்கும் போது,

- குற்றால மலையில் வாழுகின்ற குறவர்கள், காட்டில் வாழும் வேடர்கள் என அவர்களது வாழ்விடம் காட்டப்படுதல்

- கிழங்கு, தினை, பழங்கள் என அவர்களது உணவு முறை குறிப்பிடப்பட்டிருத்தல்

- பெண்கள் சிற்றில் அதாவது மணல் வீடு கட்டி விளையாடுதல் எனும் வகையில் விளையாட்டு முறை காட்டப்படுகின்றது

- குற்றாலநாதரை வழிபாடியற்றுதல் என்பதன் ஊடாக மக்களது வழிபாட்டு முறை சுட்டப்படுகின்றது.

- நெல் விளைவித்தல், தயிர் கடைதல், வேட்டையாடுதல், என அவர்களது தொழில் முறைகள் பேசப்படுகின்றன.

- நடனம் புரிதல் என்பதன் ஊடாக கலை உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு மக்களது வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் புலப்படுத்தப்படுகின்றன.

தமிழ் மொழியும் இலக்கியமும்
தமிழ் இலக்கியத் தொகுப்பு
இரண்டாம் தவணையை அடிப்படையாக கொண்ட
மாதிரி வினாத்தாள் (பகுதி III)
தரம் 10 நேரம் 2 மணி

அறிவுறுத்தல்

முதலாம் வினா, இரண்டாம் வினாவிற்கும், மூன்றாவது வினாவில் ஒன்றினையும், நான்காவது வினாவில் ஒன்றினையும், 5ம், 6ம், 7ம் வினாக்களில் ஒன்றினை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு மட்டும் விடை எழுதுக

01 . சுருக்கமான விடை தருக.

1 . தேம்படு பனையின் திரள் பழத்தொரு விதை..

அ. தேம்படு என்பதன் பொருள் யாது?
ஆ. இவ்வடிகளின் ஆசிரியர் யார்?

2. அவர் தம் வலியை அங்கவஸ்திரத்தில் ஆவாகனம் பண்ணி பக்கத்தில் வைத்துக் விட்டு பாடம் சொல்வது வழக்கம்..

அ.அங்கவஸ்திரம் என்பது குறிக்கும் கருத்து ?
ஆ. ஆவாகனம் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது?

3. யாத்த தேருருளைப் படுமேழை தான் தேர் செலுமாங்கு..

அ. மேழை என்பது உணர்த்தும் கருத்து?
ஆ. இவ்வடிகள் எத்தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?

4. ஆடிக் குடைத்தடையும் ஆடும் போதே இரையும்..

அ. இவ்வடிகளின் ஆசிரியர் யார்?
ஆ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

5. களியும் பிழை பொருட்டள்ளி நன்னூலாங் கடலினுண்டு..

அ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?
ஆ. இவ்வடிகளின் ஊடாக யாருடைய சிறப்பு காட்டப்படுகின்றது?

6. கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர் குற்றால திரிகூட மலையெங்கள் மலையே

அ. கூனலிளம் பிறை என்பதன் கருத்து யாது?
ஆ. வேணியலங்காரர் யார்?

7. எமிரோ வோரி என்பாள்
எத்துண்டி வஸ்தி என்பாள்..

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?
ஆ. இவ்வடிகள் இடம்பெறும் சிறுகதை யாது?

8. கிம்புரியின் கொம்பொடித்து வெம்பு திணை இடிப்போம்..

அ. கிம்புரி என்பது எதனைக் குறிக்கின்றது?
ஆ. இச் செயல்களை புரிபவர் யார்?

9.என்னம்மா நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ட்ரபிள் கொடுக்கிறீங்கள்..

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. ட்ரபிள் எள்பதால் விளங்கிக் கொள்வது யாது?

10. கதிகள் யாவும் தருமென ஓர்த்திடார்
கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்..

அ. கண்ணில்லாதவர் போல திகைப்பவர் யார்?
ஆ. இவ்வடிகளில் இடம்பெறும் அணி யாது?

02. பின்வரும் செய்யுட்பகுதிகளையும், உரைப்பகுதிகளையும் வாசித்து கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக.

1. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் பாத்து உண்ணும்
தன்மை இலாளர் அயல் இருப்பும் இம் மூன்றும்
நன்மை பயத்தல் இல

அ. இப்பாடல் இடம்பெறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
ஆ. ஒருவனுக்கு நன்மை பயக்காதவை எவை?

www.ikedu.lk

2. புலங்களோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்கள் ஏது விரும்புவன் அங்கு அவை
நண்ணுறப் பெறல் திண்ணம் தான் என
இலங்கு நூல் உணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்று அது மெய் எனத் தேர்ந்துளேன்
விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே.

அ. ஞானியர் கூறும் கருத்து யாது?
ஆ. முக்தியை பெறுவதற்கு வழி யாதென பாரதியார் கூறுகின்றார்?

3. பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்தது என்று
சங்கு இட்டு எறிய குரங்கு இளநீர்
தனைக் கொண்டு எறியும் தமிழ்நாடா
கொங்கார்க்கு அமராபதி அளித்த
கோவே இராச குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்
மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே.

அ. பாடலில் புலப்படும் மூன்று பிறைகளும் எவை?
ஆ. சோழமன்னனின் வீரம் எத்தகையது?

4. அந்த நாட்களில் நல்லூர் கந்தசுவாமி கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. கோயிலாருக்கு ஏற்பாட்டாளர் பிறிற்றோ. பிராமணரை ஆதரிப்பவர் நாவலர் அவர்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் செல்வாக்கைப் பிறிற்றோ அறிவார். பிறிற்றோ நாவலர் அவர்கள் தமக்கு சார்பாயிருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடாத்தி வைப்பார் என்று தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்து தாமே நேரில் சில கடிதங்களில் தந்திகளில் ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார் போலும். இந்த நேர்மையற்ற செயல் நாவலர் அவர்களின் இருதயத்தில் பெரு நெருப்பை கொளுத்திவிட்டது.

அ. நல்லூர் கோயிலாருக்கு ஏற்பட்டாளர் யார்?
பிராமணரை ஆதரிப்பவர் யார்?

ஆ. பிறிற்றோவின் நேர்மையற்ற செயல் ஒன்றை சுட்டிக்காட்டுக?

5. நண்பர் 486 கம்பியுட்டர், 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார். எங்கள் ஊரில் சிவக்கொழுந்து 1008 வேட்டி வாங்க வண்டில் கட்டி பெரிய கடைக்கு போனதைப் போல நானும் எனக்கு 486 கம்பியூட்டர்கள் கிடைக்கப்போகிறது என்று மடத்தனமாக ஒரு கணம் கணக்குப் போட்டதை எண்ணி வெட்கினேன். ஆலத்தி எடுக்க நிற்பது போல் ஆவலோடு வாசலில் காத்திருந்தாள் என் மனைவி மேகலா.

அ. பரணி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
ஆ. இவ் உரைப்பகுதியில் புலப்படும் உவமைத்தொடர்கள் இரண்டினை குறிப்பிடுக?

03. நாவலர் எழுந்தார் கட்டுரையில்,

அ. வாதமகா சபை பற்றிய வர்ணிப்பு
ஆ. நாவலர் அவர்களின் எழுகை மற்றும் நடை

அல்லது

திருக்குற்றாலக் குறவஞ்சியில்,

அ. மலை வளம்
ஆ. குற்றால நாதர் பெருமை

04. பாரதியார் சுயசரிதையில்,

அ. ஒருவன் விரும்பும் ஒன்றை பெறுவதற்கான வழிவகை
ஆ. சிறுமியின் வருகைக்காக பாரதியாரின் காத்திருப்பு

அல்லது

கம்பியூட்டர் சிறுகதையில்,

அ. சிறுகதையில் வெளிப்படும் நகைச்சுவை உணர்வு
ஆ. ஆசிரியரின் மொழிநடை

பின்வரும் 5, 6. 7 ஆகிய வினாக்களில் ஒரு வினாவிற்கு மட்டும் விடை தருக.

05. நீதிப்பாடல் பகுதயில்,

அ. அறிவுடையோர் செயல் பற்றி கூறப்படுவன

ஆ. மனத் திருப்தியோடு வாழ்வோர் தன்மை

06. ஓர் தட்டிலே பொன்னும்.. தனிப்பாடலில்,

அ. வறுமைக் கால கொடுமை

ஆ. சீதக்காதியின் கொடைத் தன்மை

07. குற்றாலக் குறவஞ்சியில் வெளிப்படும் பண்பாட்டு அம்சங்களை எடுத்துரைக்குக?

www.ikeju.lk

நாட்டார் பாடல்கள்

அலகு – 07

✠ கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்தியம்பும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனப்படும்.

✠ இப் பாடல்கள் கிராமியப் பாடல்கள், நாட்டுப்புற பாடல்கள், பாமரப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

✠ கிராமப் புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான தன்மைகளை இப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

✠ நாட்டார் பாடல்கள் உணர்ச்சி நிறைந்தவை, இசையுடன் பாடுவதற்கு ஏற்றவை.

✠ தாலாட்டுப் பாடல், மீனவர் பாடல், அரிவு வெட்டுப் பாடல், காதல் பாட்டு, ஏர்ப்பாட்டு, உழவுப் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, நலுங்குப் பாடல், மருத்துவிச்சி வாழ்த்து, ஒப்பாரிப் பாடல் எனப் பல வகையான பிரிவுகளை நாட்டார் பாடல்களில் காணலாம்.

✠ இப் பாடப்பகுதியில்.....

→ ஏர்ப்பாடல் → அரிவுவெட்டுப் பாடல்
→ மீனவர் பாடல் → காதல் பாட்டு

எனும் நான்கு விதமான நாட்டார் பாடல்களை இங்கு நோக்குவோம்.

01. ஏர்ப்பாடல்

✠ வயலில் ஏர்பூட்டி உழும் போது பாடப்படும் பாடல் இதுவாகும்.

✠ பட்டி பொருக வேணும் தம்பிரானே.. எனத் தொடங்கும் இந் நாட்டார் பாடலில், மாடுகளின் பெருக்கம், மழை பெய்து நாடு செழிக்க வேண்டும், உழவுத் தொழில் மேன்மையடைய வேண்டும், உலகத்தில் மக்கள் இனிது வாழ வேண்டும் எனும் பரந்த மனப்பாங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

குறுவினாக்கள்

1. " பட்டி பெருக வேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேண்டும்...
அ. இங்கு தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?
✷ சிவபெருமான்

ஆ. இப் பாடல் எத் தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
✷ ஏர்ப்பாட்டு

2. " மேழி பெருக வேணும் தம்பிரானே
மேதினியோர் வாழ வேண்டும்...

அ. மேழி என்பது உணர்த்தும் பொருள் யாது?

* கலப்பை, செல்வம்

ஆ. மேதினி என்பதன் பொருள் யாது?

* உலகம்

3. அ. பட்டி பெருதல் எனும் தொடரின் விளக்கம் யாது?

* பட்டியில் மாடுகளின் எண்ணிக்கை பெருகுதல்

ஆ. மேழி பெருகுதல் என்பதன் கருத்து யாது?

* செல்லம் பெருகுதல்

<u>கட்டமைப்பு வினாக்கள்</u>

1.. இப் பாடலில், கிராமத்தவர் மீதான பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது? சிவபெருமானிடம் வேண்டப்படுபவை யாவை?

இந் நாட்டார் பாடலில் ஊடாக, குறித்த ஒரு கிராமம் மீதும் அக் கிராமத்தில் வாழ்கின்றவர் நலனில் கொண்டுள்ள நலனும் அழகுற எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் சிவபெருமானிடம் வேண்டிக் கொள்வதன் ஊடா அத்தகு பரந்த மனநிலை புலப்படுகின்றது. அவற்றை நோக்கும் போது,

- பட்டியில் மாடுகளின் எண்ணிக்கை பெருக வேண்டும் என வேண்டுதல்
- பாற்பானை அதிகளவில் பொங்குவதற்கும் நெல்லும், பாலும் நிறைந்திருக்க வேண்டும் என வேண்டுதல்
- செல்வம் எங்கும் பெருக வேண்டும் என வேண்டுதல்
- உலகில் உள்ளவர்கள் நன்றாக வாழ வேண்டும் என வேண்டுதல்
- நாடு நன்றாக செழித்திருக்க வேண்டும்
- மழை நாட்டில் நன்றாக பெய்ய வேண்டும்
- உழவுத் தொழில் சிறப்புற வேண்டும்

என்பவற்றின் ஊடாக பரந்துபட்ட மனப்பாங்கு வெளிப்பட்டு நிற்பதைக் கண்ணுறலாம்.

02. பாற்பானை பொங்க வேண்டும்.. மற்றும் மேழி பெருக வேண்டும் எனும் தொடர்களில் வெளிப்படும் சிறப்பு யாது?

இந் நாட்டார் பாடலில் பாற்பானை பொங்க வேண்டும் மற்றும் மேழி பெருக வேண்டும் எனும் தொடர்களை கருத்தூன்றி பொருள் காணும் போது, மாடுகளிடம் இருந்து நிறைவான பால் கிடைக்கப்பெற்று, வயலில் விளையும் நெற்கதிர்களை அரிசியாக்கி அவற்றைக் கொண்டு நிறைவாக பால் விட்டு பொங்கல் பொங்க வேண்டும் என இங்கு வேண்டப்படுகின்றது. மேலும் மேழி என்பது கலப்பை எனவும் செல்வம் எனவும் இரு பொருளைக் குறித்து நிற்கின்றது. ஆக கலப்பையின் வாயிலாக வயலில் நல்ல விளைச்சல் கிடைத்து அதன் மூலம் செல்வம் பெருகிட வேண்டும் என இதனை நாம் கண்டு கொள்ளலாம்.

03. இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் எவை?

இந் நாட்டார் பாடலில் ஊடாக பல்வேறு வாழ்வியல் அம்சங்கள் புலப்படுகின்றன.

- உழவுத் தொழிலை ஆதாரமாக கொண்ட வாழ்வியல் காணப்படுகின்றது
- மாடுகள் வளர்த்து அதன் மூலம் பயன் பெறுதல், தொழிலை மேற்கொள்ளுதல்
- பொங்கல் பொங்குதல் எனும் பண்பாட்டு அம்சம் புலப்படுகின்றது
- எல்லோரும் வாழ வேண்டும் எனும் பொதுநலப் பண்பு காணப்படுகின்றது.
- இறைவனை அதாவது சிவபெருமானை வழிபாடியற்றும் மரபு காட்டப்படுகின்றது.

இவையனைத்தும் இப்பாடலில் புலப்படும் வாழ்வியல் அம்சங்களாகும்.

02. அரிவி வெட்டும் பாடல்

→ வயலில் நெல்லினை வெட்டியெடுக்கும் போது பாடப்படும் பாடல் இதுவாகும்

→ ஆற்றோடு ஆற்று நீர் அலைந்து வருமாப்போல்.. எனத் தொடங்கும் பாடல் எமக்குரியதாகும்

→ ஆண்களும், பெண்களும் சோர்வின்றி சுறுசுறுப்பாக அரிவி வெட்டுவதற்காக இப் பாடலைப் பாடுவார்கள்

→ காவல் தெய்வம் ஐயனாரைக் குறித்து இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

→ அரிவு வெயட்டும் வாலிபர்களுக்கு எவ்வித குற்றமும் வரக்கூடாது என ஐயனாரிடம் வேண்டப்படுகின்றது.

வினாக்கள்

01.. இப் பாடலில், அரிவு வெட்டுபவர்களை சுறுசுறுப்பாக்க கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டுக?

ஆற்றோடு ஆற்று நீர் அசைந்து வருதல்
ஆற்று நீரோடு பறவையினம் தொடர்ந்து வருதல்
சேற்றொடு வெள்ளம் தெளிந்து வருதல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருதல்

2. கண்ணூறு, நாவூறு என்பவற்றின் பொருளினை தெளிவுறுத்துக?

கண்ணூறு – ஒருவரின் மீது பலரது கண்பார்வை படுவதால் கண்களால் ஏற்படும் குற்றம்
நாவூறு - ஒருவரைப் பற்றி பலர் கதைப்பதால் நாவின் மூலம் ஏற்படும் குற்றம்

03. மீனவர் பாடல்

→ கடலில் மீன் பிடிக்கும் போது அலுப்பு நீங்கி உற்சாகத்தை பெறும் பொருட்டு இப் பாடல் பாடப்படுகின்றது.

→ வானமுட்ட ஏலேலோ நிற்கிறானே ஐலசா.. எனத் தொடங்கும் பாடல் எமக்குரிய பாடலாகும்

→ கடற்கரையில் வாழும் மக்கள் இயல்பாகவே கடலை நம்பி வாழ்க்கை நடாத்துபவர்கள்.

→ இப் பாடலில் ஏலேலோ, ஐலசா எனும் ஒலிக் குறிப்புச் சொற்களை அதிகளவில் மீனவர் பாடலில் பயன்படுத்துகின்றனர்.

01.. இப் பாடலில் மீனவர் படும் துன்பம் பற்றி யாது கூறப்படுகின்றது?

உச்சி வெய்யிலில் உடல் உருக கடலில் மீன் பிடித்தல்
கடலை நம்பி அவர்கள் வாழ்க்கை விளங்குதல்

02. பல கஷ்ரத்தின் மத்தியிலும் நான் உன் நினைவுடனே இருக்கின்றேன் எனும் தன்மை எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது.?

மண்னை நம்பி மரம் இருக்கிறது
மரத்தை நம்பி கிளையிருக்கிறது
கிளையை நம்பி பூவிருக்கிறது
பூவை நம்பி பிஞ்சு இருக்கிறது
பிஞ்சை நம்பிப் பழம் இருக்கிறது

எனக் கூறி இதைப் போலவே நானும் உன்னை நம்பி இருக்கிறேன். இவை ஒன்றுடன் ஒன்று தங்கியிருப்பதைப் போல நானும் உன்னை நம்பி நானிருக்கிறேன் என் கூறிகின்றான். மேலும் உச்சி வெய்யிலில் நின்று உருகுகின்றேன், என் உள்ளம் உன்னிடமே உள்ளது இந்தக் கஷ்ரத்தின் மத்தியிலும் நான் உன் நினைவுடனே இருக்கின்றேன். இக் கருத்து ஓர் தலைவன் தன் காதலியைக் குறித்து பாடுவதாகவும், ஓர் மீனவன் கடலை நோக்கி பாடுவதாகவும் இரு அர்த்தங்களில் காணமுடியும்.

04. காதல் பாடல்

→ நாட்டார் பாடலில் காதல் பாடலும் ஒன்றாகும்
→ காதல் வயப்படும் காதலன், காதலி பற்றிய வெளிப்பாடு கிராமிய மண்வாசணையுடன் புலப்படுகின்ற தன்மையை காதல் பாட்டில் காணலாம்.
→ ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே .. எனத் தொடங்கும் பாடல் எமக்குரிய பாடலாகும்.
→ இங்கு முஸ்லிம் கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட ஓர் காதற் பாட்டினை காணலாம்.
→ ஓர் காதலன் தன் காதலியை பல பெயர்கள் கூறி அவளை வர்ணிப்பதாக இப் பாடல் விளங்குகின்றது.

குறுவினாக்கள்

01.

01.. " ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே
ஓசைக் குரல்லே..

அ. இங்கு ஆசியத்து உம்மா எனக் குறிக்கப்படுவது யாது ?
காதலியின் பெயர்

ஆ. இக் கூற்று யாரால் உரைக்கப்பட்டுள்ளது ?

காதலனால்

02. " மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே
ஏலங்கிராம்பே...

அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது?
வம்சம், குடும்பம்

ஆ. மாமி மகளே என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் உறவு முறை யாது?
மாச்சாள், மைத்தனி

03. " அல்லா மேல் ஆணை உன்னை அடையாட்டி
காட்டுப்பள்ளி...

அ. காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?
மயானம்

ஆ. அல்லா எனக் குறிப்பது யாரை?
இஸ்லாமியரது கடவுளை

04. " சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே...

அ. இங்கு காதலன் தன் காதலியை எவ்வாறு வர்ணிக்கின்றான்?
சீனத்து செப்பு, சிங்கார பூநிலா

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
உருவகம்

05. கடலே நீ இரையாதே காற்றே நீ வீசாதே நிலவே
நீ எறியாதே என்ர நீல வண்டு போய்ச் சேருமட்டும்..

அ. இவ்வடிகளின் வாயிலாக காதலனின் எத்தகு உணர்வு வெளிப்படுகின்றது?

காதலி மீது கொண்ட அன்பு, அக்கறை

ஆ. நிலவே நீ எறியாதே.. என காதலன் உரைக்கக் காரணம் யாது?

நிலவு வானிலே தோன்றினால் இரவு வந்துவிடும் அதனால் தன் காதலி அச்சமடைவாள் எனவும், தன்னை பிரிந்து செல்வதால் நிலவின் ஒளி அவளுக்கு துன்பத்தை கொடுக்கும் என்பதாலும்

02. இப் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறான பெயர்களைக் கூறி அழைக்கின்றான்?

இப் பாடலில்காதலன் தன் காதலியை பலவாறு பெயர் கூறி அழைக்கின்றான். அதாவது,

ஆசைக்கிவி	சீனத்து செப்பு
ஏலாங்கிராம்பே	மருதக்கிவி வங்கிசம்
நீலவண்டு	சிங்கார பூநிலா
மாமி மகவர்	மச்சி

ஏன அவற்றற கண்ணுறலாம்.

03. காதலன் தன் காதலி மீது கொண்ட அதீத அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?

மேற் குறித்த நாட்டார் பாடல் வாயிலாக காதலன் தன் காதலி மீது கொண்ட அன்பு அழகுற புலப்பட்டு நிற்கின்றது. அத்தகு தன்மைகளை இங்கு நோக்கும் போது,

✸ தன் காதலியைப் பல பெயர் கூறி ஆசையோடு அழைத்தல்

உ– ம் – நீலவண்டு, ஆசைக்கிவி

✸ தான் உன்னை அடையாவிடில் தான் இறந்து விடுவேன் எனக் கூறுதல் அதாவது தன் காதலி கிடைக்காது போனால் தான் இறந்து மாயனத்திடை சென்று விடுவேன் எனக் கூறுவதன் ஊடாக காதலனது ஆழமான அன்பு வெளிப்படுகின்றது.

✸ தன் காதலி செல்லும் வழியில், காற்றின் வேகம், கடலின் ஓசை, நிலாவின் ஒளி இவையனைத்தும் தன் காதலிக்கு அச்சத்தை ஏற்படுத்தி விடும் எனக் கூறி அவற்றின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளுமாறு உத்தரவிடுதல்.

✸ உறங்கும் போது தன் காதலி காலடியில் வந்திருந்ததாக கூறுதல்
✸ தன் மச்சி, மாமி மகவர், ஆசியத்து உம்மா என உரிமை கொண்டாடி அவளோடு அன்பு பாராட்டுதல்.

✸ தூது விடவா, என அவவர் சம்மதத்தை நாடி நிற்றல்

✸ இனிமையான குரல் கொண்டவவர் தன் காதலி எனக் கூறி நிற்றல்

✸ இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுவதன் ஊடாக தன் காதலி மீது கொண்ட அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தி நிற்கின்றான் காதலன்

இவ்வாறு காதலன் காதலி மீது கொண்ட அன்பானது அழகுற புலப்பட்டு நிற்கின்றது.

04. இப் பாடலில் இழையோடியிருக்கும் வாழ்வியல் பண்புகளை எடுத்துரைக்க?

மேற் குறித்த நாட்டார் பாடல் காதல் பாடல் எனும் தலைப்பில் ஒரு இஸ்லாமிய சமூகத்தின் பேச்சு வழக்கினை கொண்டு அமையப் பெற்றுள்ளது. அப் பாடலில் புலப்படும் வாழ்வியல் அம்சங்களை நோக்கும் போது,

✸ உறவு முறை பாராட்டும் தன்மை காணப்படுகின்றது

உ.ம் - மாமிமகள், மச்சி

✸ அல்லா மீது ஆணை செய்தல். இதன் வாயிலாக இறை நம்பிக்கை காட்டப்படுகின்றது.

✸ உண்மைக் காதல் இங்கு காட்டப்படுதல்

உ.ம்.- உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி என கூறுதல்

✸ ஓதிப் படிச்சு.. என்பதன் ஊடாக இஸ்லாமியரது புனித நூலை படித்தல் எனும் தன்மை காட்டப்படுகின்றது

✸ காவல் செய்யும் போது உறங்குவதற்கு பரண் அமைக்கும் தன்மை புலப்படுகின்றது.

இவ்வாறாக இத் தன்மையினை அறிந்து கொள்ளலாம்.

www.lkedu.lk

கம்பராமாயணம்

அலகு –08

☞ இதிகாசங்களில் ஒன்றாக விளங்கும் பெருமையுடையது இராமாயணமாகும்.

☞ வடமொழியில் வால்மீகியால் இயற்றப்பட்ட இவ் இராமாயணம் ஆதி காவியம் என சிறப்பிக்கப்படுகின்றது.

☞ இராமாயணத்தை தமிழில் இயற்றியவர் கம்பர். ஆகையால் இது கம்பராமாயணம் என அழைக்கப்படுகின்றது.

☞ விஷ்ணுவின் அவதாரமாகிய இராமனின் பெருமைகளையும், சிறப்புக்களையும் கூறியிருப்பது கம்பராமாயணமாகும்.

☞ கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் பால காண்டம், அயோத்யா காண்டம், ஆரண்ய காண்டம், கீட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பனவாகும் அவை.

☞ இராமாயணத்தில் பெரும் பகுதி காண்டம் எனப்படும். சிறுபகுதி படலம் எனப்படும்.

குகப் படலம் (கங்கை காண்படலம்)

☞ கம்பராமாயணத்தில் இரண்டாவது காண்டமாகிய அயோத்தியா காண்டத்தில் உள்ள படலம் குகப்படலமாகும்.

☞ பரதன் குகனைச் சந்தித்து அவன் உதவியுடன் கங்கையைக் கடந்து காடு சென்று இராமனைச் சந்தித்தமையால் இது குகப் படலம் எனப்படுகின்றது.

☞ பரதன் கங்கையைக் கண்டமையால் இது கங்கை காண் படலம் எனவும் அழைக்கப்படுகின்றது.

☞ குறைந்த பாடல்களைக் கொண்ட படலமாக விளங்கும் குகப்படல் கங்கை காண்படலத்துடன் இணைக்கப்பட்டதாகவும் கருதப்படுகின்றது.

☞ பரதன் குகனின் ஆணைப்படி தோணியில் ஏறுதல், தன் தாய்மார்களை குகனுக்கு பரதன் அறிமுகம் செய்தல், குகனைத் தன் தாய்மாருக்கு அறிமுகம் செய்தல், கோசலை தன் புதல்வர்களை வாழ்த்துதல், கைகேயியின் கொடுத்தன்மை என்பன பற்றி இப்பாடப்பகுதியில் உள்ள 08 பாடல்கள் வாயிலாக நோக்கலாம்.

☞குகப்படலத்தில் 72 பாடல்கள் உள்ளன. அதில் 63 தொடக்கம் 70 வரையான பாடல்களை நாம் பாடப்பகுதியில் நோக்குவோம்.

www.ikeau.lk

குகப்படலம் – பாடல்கள்

பாடல் 01 – பரதன் நாவாயில் ஏறுதல்

சுழித்து நீர் வரு துறை ஆற்றை சூழ்படை
கழித்து நீக்கியது என கள்ள ஆசையை
அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்

பாடல் கொண்டு கூட்டிய பின்

சூழ்படை நீர் சுழித்து வரு துறை ஆற்றை
கழித்து நீக்கியது என கள்ள ஆசையை
அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்

அரும்பதம்

சுழித்து	–	சுழியுண்டாகி
சூழ்படை	–	சுற்றியுள்ள படை
கள்ள ஆசை	–	வஞ்சகமான ஆசை மண்ணாசை
அவனி	–	உலகம்
பண்டு	–	முன்னர்,முன்பு
இழித்து	–	கீழ்ப்படுத்தி
மேல் ஏறினான்	–	மேம்பட்டு நின்றான், உயர்ந்து நின்றான்

பொருள்

பரதன், தன்னைச் சுற்றியுள்ள சேனையானது நீர்ச் சுழியுண்டாக்கி பெருகிவரும் கரையமைந்த கங்கையாற்றினை கடந்து விட, வஞ்சகமான மண்ணாசையை நீக்கிய நல் குணத்தினால், இம் பூமியை முன்னர் ஆட்சி செய்த மன்னர்கள் அனைவரையும் கீழ்ப்படுத்தி உயர்ந்து நின்றவனாகிய பரதன் தோணியில நாவாயில் ஏறினான்.

பாடல் சிறப்பு

☞ பரதன் சேனையுடன் தோணியில் ஏறும் காட்சியை வெளிப்படுத்தும் பாடலாகும்.

☞ தன் நற்குணத்தினால் உயர்ந்து நின்ற பரதனது சிறப்பு இப் பாடலில் வெளிப்படுகின்றது.

☞ ஏறினான் எனும் சொல் இரு பொருள்பட விளங்கும் தன்மையினையும் இப்பாடலில் காணலாம்.

www.ikedu.lk

பாடல் – 02 (கோசலையை பரதன் குகனுக்கு அறிமுகம் செய்தல்)

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
கொற்றத்தார் குரசில் இவர் ஆர் என்று
குகன் வினவ, கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று
உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான்
பிறந்தலால், துறந்த பெரியாள், என்றான்

அரும்பதம்

சுற்றம்	–	உறவினர்
கொற்றம்	–	வெற்றி
தார்	–	மாலை
குரசில்	–	தலைவன்
கோக்கள்	–	அரசர்கள்
வைகும்	–	தங்கும்
முற்றத்தான்	–	முன்றிலை உடையவன்
பெரியாள்	–	பெருமைக்குரியவர்

பொருள்

உறவினர்களும், தேவர்களும் வணங்கும் படியாக நின்ற கோசலையை (குகன்) வணங்கி நோக்கி, வெற்றி பொருந்திய மாலையை அணிந்த பரதனிடம், இவர் யார் என்று கேட்க, அரசர்கள் அனைவரும் வந்து தங்குகின்ற முன்றிலை உடைய தசரதனின் மூத்த பட்டத்து அரசி, மூன்று உலகையும் படைத்த பிரம்மதேவனை முன்னர் படைத்தவனாகிய (தன் நாபிக் கமலத்தில் தோற்றுவித்தவன்) இராமனை (விஷ்ணு) மகனாகப் பெற்றதால் தான் பெறவேண்டிய அரச செல்வத்தை நான் பிறந்தமையால் இழந்த பெருமைக்குரியவள் என பரதன் கூறினான்.

பாடலின் சிறப்புக்கள்

☞ குகன் கோசலையைப் பார்த்து குகனிடம் யாரென வினவும் பாடல் இதுவாகும்.

☞ கோசலையின் சிறப்பும், பெருமையும் அழகுற இப்பாடலில் வெளிப்படுகின்றது.

☞ தசரதனின் சிறப்பும் இப் பாடலில் வெளிப்படுகின்றது.

☞ மூன்று உலகும் படைத்த பிரம்மனை தன் நாபியில் படைத்த விஷ்ணுவை இராமனாக பெற்றெடுத்தவள் கோசலை எனும் கருத்தும் இங்கு தெளிவுறுத்தப்படுகின்றது.

என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து
அழுவானை, இவன் யார்? என்று
கன்று பிரி கராவின் துயர் உடைய
கொடி வினவ, கழல் கால் மைந்தன்
இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும், மூத்தான்
குன்று அனைய திரு நெடும் தோள் குகன்
என்பான் இந் நின்ற குரசில் என்றான்

அரும்பதம்

அடியின் மிசை	–	திருவடிகள் மேல்
நெடிது	–	நீண்ட
கராவ்	–	கராம்பசு
கழல்கால்	–	கழல் அணிந்த கால்
குன்று	–	மலை
திரு	–	அழகிய
குரசில்	–	தலைவன்

பொருள்

இவ்வாறு பரதன் கூறியவுடன், கோசலையின் திருவடிகளில் நீண்ட நேரம் வீழ்ந்து கிடந்து அழுகின்ற, குகனை கன்றினைப் பிரிந்த காராம் பசுவின் துயரினை உடைய கொடி போன்றவளான கோசலை யார் என்று கேட்க, வீரக்கழல் அணிந்த பரதன் இந்த ஆண்மகன், இராமனுக்கு இனிய சகோதரன், இலக்குவனனுக்கும், சத்துருக்கனுக்கும், எனக்கும் அண்ணன். மலை போன்ற வலிமையான பெரிய தோள்களை கொண்டவன், குகன் எனும் பெயருடையவன் என்றான்.

பாடலின் சிறப்புக்கள்

☞ கோசலையைப் பற்றி பரதன் கூறியதும் குகன் கோசலையின் பாதங்களில் வீழ்ந்து அழுது தொழும் காட்சி பாடலில் வெளிப்படுகின்றது.

☞ இராமனைப் பிரிந்தமையால் துன்பமடையும் கோசலையும் நிலையும் இப் பாடலில் வெளிப்படுகின்றது.

☞ கோசலை குகனைப் யாரென பரதனிடம் வினவ பரதன் குகனை அறிமுகம் செய்கின்றான்

☞ குகனது சிறப்பும் பெருமையும் இப் பாடலில் புலப்படுகின்றது.

☞ உவமையணியும் இப்பாடலில் அழகு சேர்க்கின்றது

நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால்
நாடு இறந்து காடு நோக்கி
மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று
ஆம் அன்றே விலங்கல் திண் தோள்
கை வீரக் கவிறு அனைய காளை இவன்
தன்னோடும் கலந்து நீவிர்
ஜவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்
காலம் அளித்திர் என்றாள்

அரும்பதம்

நைவீர்	–	வருந்தாமல்
அலீர்	–	இருப்பீர்கள்
மெய்வீரர்	–	சுத்த வீரர்
நாடு இறந்து	–	நாட்டை துறந்து
பெயர்ந்தது	–	சென்றது
விலங்கல்	–	மலை
திண்தோள்	–	வலிமையான தோள்
கைவீரம்	–	துதிக்கையால் செய்யும் வீரச் செயல்
கவிறு	–	ஆண் யானை
ஒருவீராய்	–	ஒன்று பட்டவராய்
அகல் இடம்	–	அகன்ற உலகம்

பொருள்

அப்போது கோசலை அவர்களைப் பார்த்து, புதல்வர்களே, இனியும் துன்பத்தால் வருந்தாமல் இருப்பீர்களாக, உண்மையான வீரர்களாகிய இராம, இலக்குவனர்கள் நாட்டினை துறந்து காட்டினை நோக்கிச் சென்றதும் நன்மைக்கே அல்லவா? நன்மைக்கேயாகும். (குகனை சகோதரனாக பெற்றமையால்) எனவே மலை போன்ற வலிமையான தோள்களையும், தன் துதிக்கையால் வீரச் செயல்களை புரிகின்ற ஆண் யானையை ஒத்த ஆண் மகனாகிய இந்தக் குகனோடு ஒன்று பட்டு நீங்கள் ஜவரும் அகன்ற இந்த நிலவுலகை நீண்ட காலம் ஆட்சி செய்வீர்களாக என்றாள்.

பாடலின் சிறப்புக்கள்

☞ கோசலை தன் புதல்வர்களை தேற்றி அவர்களை வாழ்த்தும் பாடல் இதுவாகும்

☞ சாதாரண குலத்தில் பிறந்த குகனையும் தன் பிள்ளைகளுடன் இணைத்து நாட்டை ஆளுமாறு கூறிய கோசலையின் உயரிய மனநிலை இங்கு வெளிப்படுகின்றது.

அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை
நோக்கி, ஐய. அன்பின்
நிறைந்தாளை உரை என்ன நெறி திறம்பா
தன் மெய்யை நிற்பது ஆக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும்
தொழு குலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்ன பிரியாதான் தனைப்
பயந்த பெரியாள் என்றான்.

அரும்பதம்

அறம்	–	தருமம், அறக்கடவுள்
நெறி திறம்பா	–	சத்தியவழி தவறாது
மெய்	–	வாய்மை
தொழுகுலம்	–	வணங்குகின்ற குல தெய்வம்
பிரியாதான்	–	பிரியாதவன்
பயந்த	–	பெற்றெடுத்த

பொருள்

அறக்கடவுளோ/ தருமதேவதையோ என்று சொல்லும் படியாக அருகில் நின்ற சுமித்திரையை குகன் பார்த்து, அன்பின் வடிவமான இவரை யாரொன்று கூறும் படி வினவ, பரதன் இவர் சத்திய வழியில் நின்று சிறிதும் தவறாது தன் வாய்மையை நிலைநாட்டி தன் உயிரைத் தியாகம் செய்த தசரதனின் இளைய பட்டத்து அரசியாவார். மேலும், அனைவருக்கும் குல தெய்வமாக விளங்குகின்ற இராமனுக்குப் பின் பிறந்தவன் என்று எல்லோரும் சொல்லும் படியாக அந்த இராமனை விட்டுப் பிரியாதவனாகிய இலக்குவனனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள் என்றான்.

பாடலின் சிறப்புக்கள்

☞ சுமித்திரையை யாரென குகன் வினவுதலும் அதற்கு பரதன் விடை கூறுவதுமான பாடல் இதுவாகும்.

☞ சுமித்திரையின் சிறப்பு இப்பாடலில் வெளிப்படுவதுடன் தசரதனின் சிறப்பும் புலப்படுகின்றது.

☞ இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனனைப் பெற்றெடுத்த சிறப்பினை பெறுபவள் சுமித்திரை எனும் கருத்தும் இங்கு தெளிவாகிறது.

பாடல் - 06 குகன் கைகேயியைப் யாரென பரதனிடம் வினவுதல்

சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலில் ஏக
கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி
ஏக கழல்கால் மைந்தன்
நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை ஆர் இவர்
என்றுஉரை என்ன குரசில் கூறும்

அரும்பதம்

மயானம்	–	சுடுகாடு
தன் துணை	–	தன் கணவன்
தோன்றல்	–	மகன் பரதன்
கானகம்	–	காடு
ஆர்கலி	–	கடல்
நெடுமை	–	நீண்ட, உயர்ந்த
குரசில்	–	தலைவன் பரதன்

பொருள்

தன் கணவனாகிய தசரதன் சுடுகாட்டிற்கு செல்ல, தன் மகனாகிய பரதன் துன்பக் கடலில் செல்ல, கருணை வடிவான இராமன் கொடிய காட்டிற்கு செல்ல, வீரக்கழல் அணிந்த திருமால் முற்காலத்தில் தன் நீண்ட உருவம் கொண்டு மூவடியால் (வாமனர்) அளந்த உலகனைத்தையும், (அவ்வாறு திருமாலைப் போல சிரமப்படாது) தன் மனத்தினால் எண்ணிச் செய்கின்ற கொடுமைகளால் இலகுவாக அளந்தவளாகிய கைகேயியைப் பார்த்து இவர் யார்? என்று கேட்க, பரதன் கூறத் தொடங்கினான்.

பாடலின் சிறப்புக்கள்

☞ கைகேயியைப் பார்த்து குகன் யார் என பரதனிடம் வினவுவதாக அமையும் பாடலாகும்.

☞ கைகேயி புரிந்து செயல்களை இப் பாடல் அழகுற வெளிப்படுத்துகின்றது.

☞ கைகேயின் கொடுமையும் இப் பாடலில் காட்டப்பட்டுள்ளது.

☞ மூன்று உலகையும் முன்னர் நெடிய உருவம் கொண்டு அளந்த திருமாலைப் போல தான் செய்யும் துன்பத்தினால் மூவுலகையும் அளவிட்டவள் கைகேயி எனும் கருத்தும் தெளிவுறுகின்றது.

☞ உருவ அணிகள் பாடலில் இடம் பெற்றுள்ளன.

துயர்க்கடல், கருணைஆர்கலி

படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும்
செவிலியை தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடும் காலம் கிடந்து ஏற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர் எலாம் உயிர் இலா எனத் தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந் நின்றாள் என்னை ஈன்றாள்

அரும்பதம்

படர்	–	துன்பம்
செவிலி	–	வளர்ப்புத் தாய்
பாழ்த்த	–	பாழ்பட்ட
குடர்	–	வயிறு
உடர்	–	உடல்
இடர்	–	துன்பம்

பொருள்

இவள், துன்பங்கள் அனைத்தையும் உண்டாக்கியவளும், பழியாகிய குழந்தையை வளர்க்கும் தாயானவளும் ஆவாள். இவளது தீவினையான வயிற்றிலே, நீண்ட காலம் கிடந்த எனக்கு உயிராகிய பாரம் குறைந்து தேயும் படியாக, உடல்கள் எல்லாம் உயிரில்லாதன எனத் தோன்றும் இவ் உலகில், இவள் ஒருத்தி மட்டுமே துன்பமில்லாத முகத்தை உடையவள். இவ்வளவு நேரமும் இவள் முகத்தைக் கொண்டே இவளை அறிந்திருக்காது விடின் இதோ இங்கிருப்பவள் என்னைப் பெற்ற கைகேயி என்பவள்.

பாடலின் சிறப்புக்கள்

☞ பரதன் கைகேயியை குகனுக்கு அறிமுகம் செய்வதாக இப் பாடல் அமைகின்றது.

☞ கைகேயியின் கொடிய தன்மை மற்றும் குணநலன்கள் இப் பாடலில் வெளிப்படுகின்றன.

☞ தன் தாயின் வயிற்றை பாழ்பட்ட வயிறு எனக்கூறியதன் வாயிலாக பரதன் கைகேயி மீது கொண்ட வெறுப்புணர்ச்சி காட்டப்படுகின்றது.

☞ மேலும் பழியைத் தன் குழந்தையாக வளர்ப்பவள் எனத் கைகேயியை பரதன் உரைக்கின்றான்.

பாடல் - 08 குகன் கைகேயியை வணங்குதல்

என்னக் கேட்டு அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன் தாய் என
அன்னப் பேடை சிறை இலாது ஆய்க்கரை
துன்னிற்று என்னவும் வந்தது தோணியே

அரும்பதம்

என்ன கேட்டு	–	இவ்வாறு சொல்லக்கேட்டு
இரக்கம் இலாள்	–	இரக்கம் இல்லாத கைகேயி
நல்கை	–	நல்லகை
அன்னப் பேடை	–	பெண் அன்னம்
துன்னிற்று	–	அடைந்தது

பொருள்

பரதன் இவ்வாறு சொல்லக் கேட்ட குகன் அந்த இரக்கம் இல்லாத கைகேயியையும் தன் நல்ல கைகளால், தனது தாய் எனக் கருதி வணங்கினான். அப்போது தோணியானது, பெண் அன்னம் சிறகு இல்லாது கரை சேர்வதைப் போன்று கரையினை வந்தடைந்தது.

பாடலின் சிறப்புக்கள்

☞ பரதன் கைகேயியையும் தன் தாய் எனக் கருதி வணங்குவதை வெளிப்படுத்தும் பாடலாகும்.

☞ தோணியானது கரையினை அடையும் காட்சி இங்கு காட்டப்படுகின்றது.

☞ அழகிய உவமையணி வாயிலாக அக் காட்சி தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

உவமானம் – அன்னம் சிறகு இல்லாது கரை அடைதல்
உவமேயம் – தோணி கரை அடைதல்
பொதுத்தன்மை– கரை அடைதல்



www.ikeda.lk

செய்யுள் அடிகளை அடிப்படையாக கொண்ட குறுவினாக்கள்
(02 புள்ளிகளுக்குரியவை)

01.“ கள்ள ஆசையை அழித்து வேறு அவனி
பண்டு ஆண்ட...”

அ. கள்வ ஆசை என்பது உணர்த்தும் கருத்து யாது?

✸ வஞ்சனையான மண்ணாசை

ஆ. பண்டு ஆண்ட என்பதன் கருத்து யாது?

✸ முன்னர் ஆட்சி செய்த

02. “ அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து
மேல் ஏறினான் தானும் ஏறினான் ... ”

அ. இங்கு ஏறினான் எனப்படுபவன் யார்?

✸ பரதன்

ஆ. ஏறினான் என்பது குறிக்கும் இரு பொருள் யாவை?

✸ ஏறினான் - உயர்ந்து நின்றான்
✸ ஏறினான் - தோணியில் ஏறினான்

03. “ கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி... ”

அ. இங்கு முதல் தேவி எனப்படுபவர் யார்?

✸ கோசலை

ஆ. கோக்கவர் வைகும் முற்றத்தான் யார்?

✸ தசரதன்

04. “ மூன்று உலகும் ஈன்றானை முன்ஈன்றானைப்... ”

அ. இங்கு மூன்று உலகும் ஈன்றவன் யார்?

✸ பிரம்மன்

ஆ. முன் ஈன்றான் எனும் பதம் யாரைக் குறிக்கிறது?

✸ திருமால் - இராமன்

05. “ கன்றுபிரி காராவின் துயருடைய கொடி வினவ... ”

அ. இங்கு கொடி எனப்படுவது யார்?

✸ கோசலை

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

✸ உவமையணி - பூங்கொடி போன்ற கோசலை

www.ikeda.lk

06. " இன் துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்... "

அ. இதில் இளையவன், மூத்தான் எனப்படுபவர்கவ் யாவர்?

✷ இளையவன் - சத்ருக்கனன்
✷ மூத்தான் - குகன்

ஆ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

✷ பரதனால் கோசலைக்கு

07. " குன்று அனைய திருநெடுந் தோள்குகன்
என்பான் இந் நின்ற குரசில்... "

அ. இங்கு குகனது சிறப்பு யாது?

✷ மலை போன்ற அழகிய உயர்ந்த தோள்களை கொண்டவன்

ஆ. குரசில் என்பதன் கருத்து யாது?

✷ தலைவன்

08. " நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால் நாடு இறந்து
காடு நோக்கி மெய் வீரர் பெயர்ந்ததுவும். .. "

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

✷ கோசலையால் பரதன் மற்றும் குகனுக்கு

ஆ. மெய் வீரர் என விழிக்கப்படுவர்கவ் யாவர்?

✷ இராம இலக்குவனன்

09. " விலங்கல் திண் தோள் கை வீரக் களிறு அனைய காளை இவன்.. "

அ. விலங்கல் என்பது குறிக்கும் கருத்து யாது?

✷ மலை

ஆ. இவ்வடிகளில் காளை என விளிக்கப்பட்டவன் யார்?

✷ குகன்

10. " நீவீர் ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்
காலம் அளித்தீர் என்றான்... "

அ. இக் கூற்றினை உரைத்தது யார்?

✷ கோசலை

ஆ. இங்கு ஐவீர் எனப்படுவோர் யாவர்?

✷ இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கனன், குகன்

www.lkedu.lk

11. " அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை
.நோக்கி, ஐய. அன்பின் நிறைந்தாளை உரை ... "

அ. இதில் அயல் நின்றாவ் எனக் கருதுவது யாரை?

✷ சுமித்திரை

ஆ. இக் கூற்றினை வினவியது யார்?

✷ குகன் பரதனிடம்

12. " யாவர்க்கும் தொழு குலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் ... "

அ. யாவர்க்கும் தொழுகுலமாக விளங்குபவன் யார்?

✷ இராமன்

ஆ. இராமன் பின்பு பிறந்தான் என இங்கு குறிப்பிடப்படுபவன் யார்?

✷ இலக்குவனன்

13. " சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலில் ஏக ... "

அ. இங்கு சுடுமயானத்திடை ஏகியவன் யார்?

✷ தசரதன்

ஆ. சுடுமயானத்திடை தன் கணவனை அனுப்பியவள் யார்?

✷கைகேயி

இ. தோன்றல் எனப்படுபவன் இங்கு யார்?

✷ பரதன்

14. " கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி ஏக... "

அ. இங்கு வெளிப்படும் அணியினைக் குறிப்பிடுக?

✷ உருவகஅணி- கருணைஆர்கலி

ஆ. இங்கு கருணை ஆர்கலி எனப்படுபவன் யார்?

✷ இராமன்

15. " கழல்கால் மைந்தன் நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை... "

அ. உலகனைத்தையும் நெடுமையால் அளந்தவன் யார்?

✷ திருமால் -வாமனன்

ஆ. உலகனைத்தையும் கொடுமையாவ் அளந்தது யார்?

✷ கைகேயி

www.ikeduLK

16. “ படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும்
செவிலியை... ”

அ. படர் எலாம் படைத்தவள் இங்கு யார்?

✷ கைகேயி

ஆ. செவிலி என்பதன் பொருள் யாது?

✷ வளர்ப்புத் தாய்

17. “ இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந் நின்றாள் என்னை ஈன்றாள்... ”

அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

✷ பரதனால் குகனுக்கு

ஆ. இடர் இலா முகத்தினாள் எனப்படுவது யாரை?

✷ கைகேயியை


18. “ அன்னப் பேடை சிறை இலாது ஆய்க்கரை
துன்னிற்று என்னவும் வந்தது தோணியே... ”

அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

✷ உவமையணி

ஆ. துன்னிற்று என்பது குறிக்கும் கருத்து யாது?

✷ அடைந்தது, சேர்ந்தது



www.ikedu.lk

செய்யுள்களை அடிப்படையாக கொண்ட வினா – விடை
(04 புள்ளிகளுக்குரியவை)

01. சுழித்து நீர் வரு துறை ஆற்றை சூழ்படை.... எனும் பாடலில்,

அ. பரதனின் சிறப்பினை எடுத்துரைக்க?

➢ தனது நற்ச் செயலால் முன்னர் பூமியை ஆட்சி செய்த மன்னர்களை கீழ்ப் படுத்தி உயர்ந்து நின்றவன்

ஆ. ஏறினான் எனும் சொல் இரு பொருள் குறிக்கிறது அவற்றை தெளிவுறுத்துக?

➢ 1. உயர்ந்து நின்றவன், மேம்பட்டு நின்றவன்
2 . ஓடத்தில் ஏறினான்

02. சுற்றத்தார் தேவரொரும் தொழ நின்ற...எனும் பாடலில்,

அ. கோசலையின் சிறப்பினை எடுத்துக் காட்டுக? .

→ உறவினர்களும், தேவர்களும் வணங்கும் சிறப்பு உடையவள்
→ தசரதனின் முதல் பட்டத்து அரசி
→ விஷ்ணுவின் அவதாரமாகிய இராமனை பெற்றெடுத்தவள்

ஆ. இப் பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது?

→ குகன் கோசலையை யாரென வினவுதலும், பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்தலும்

03. என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து... எனும் பாடலில்,

அ. குகனை பரதன் கோசலைக்கு எவ்வாறு அறிமுகம் செய்கின்றான்?

→ இராமனுக்கு இனிய சகோதரன், இலக்குவன், சத்ருக்கனன், மற்றும் தனக்கு மூத்த அண்ணன், மலை போன்ற நெடிய தோள்களை உடையவன், குகன் எனும் பெயர் கொண்டவன்

ஆ. இப் பாடலில் இடம் பெற்றுள்ள அணியினை விளக்குக? .

→ உவமையணி
கன்றினைப் பிரிந்த காராம்பசுவின் துயரை ஒத்த கோசலையின் துயரம்

உவமானம் – கன்றினை பிரிந்த காராம்பசு

உவமேயம் – இராமனைப் பிரிந்த கோசலை

பொதுத்தன்மை – துயரம்

04. நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால்... எனும் பாடலில்,

அ. கோசலை ஆறுதல் வாழ்த்தும் தன்மையினை குறிப்பிடுக?

→ நீங்கள் ஐவரும் ஒன்றுபட்டவர்களாக இந்த அகன்ற நிலவுலகை நெடுங்காலம் ஆட்சி புரியுங்கள் என வாழ்த்தினாள்

ஆ. குகனின் சிறப்பினை எடுத்துரைக்குக?

→ மலை போன்ற வலிய தோள்களை உடையவன், தன் துதிக்கையால் வீரச்செயல் புரிகின்ற ஆண் யானை போன்றவன்

05. அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை... எனும் பாடலில்,

அ. இப் பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது?

→ அறத்தின் உருவம் போன்று அயலில் நின்ற சுமித்திரையை யாரென குகன் பரதனிடம் கேட்க சுமித்திரையை பரதன் குகனுக்கு அறிமுகம் செய்தலும்

ஆ. சுமித்திரையின் சிறப்புக்கள் யாவை?

→ தரும தேவதை, என்று சொல்லத்தக்க வகையில் நின்றவள் அறத்தின் உருவம் போன்றவள்

→ தசரதனின் இளைய பட்டத்து அரசி

06. சுரு மயானத்திடை தன் துணை ஏக... எனும் பாடலில்,

அ. கைகேயியின் கொடுமை எவ்வாறு காட்டப்படுகின்றது?

→ தன் கணவனான தசரதனை சுடுகாட்டிற்கு அனுப்பியவள்

→ கருணைக் கடலான இராமனை காட்டிற்கு அனுப்பியவள்

→ தன் மகனான பரதனை துயர்க் கடலில் அனுப்பியவள்

ஆ. பாடலில் வெளிப்படும் அணியினை உதாரணம் தந்து விளக்குக? → உருவக அணிகள் இடம்பெற்றுள்ளன

துயர்க்கடல் – துயரமாகிய கடல் .

கருணைஆர்கலி – கருணைக்கடலாகிய இராமன்

07. என்னைக் கேட்டு அவ் இருக்கம் இலாளையும்... எனும் பாடலில்,

அ. குகன் கைகேயியை வணங்கிய தன்மை யாது?

→ தன் தாய் போன்று நினைத்து தன் அழகிய கைகளால் வணங்கினான்.

ஆ. இப் பாடலில் உள்ள அணி யாது?

→ உவமையணி – சிறகு இல்லாது கரை அடைந்த பெண் அன்னம் போன்று தோணியும் கரையினை வந்தடைந்தது.

கட்டமைப்பு வினாக்கள்

01. குகப் படலம் எனும் பகுதியில் இடம் பெறும் கதாபாத்திரங்களை குறிப்பிடுக?

கம்பராமாயணம் எனும் பகுதியில் குகப்படலத்தில்,

பரதன்
கோசலை
குகன்
சுமித்திரை
கைகேயி

இவற்றை விட பாடல்களில் இராமன், இலக்குவனன், தசரதன், சத்ருக்கனன் போன்ற முக்கியமான கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

02. குகப்படலத்தில், கோசலையின் சிறப்புக்கள் குணப்பண்புகள் பற்றி எடுத்துரைக்குக?

குகப்படலத்தில், கோசலையின் சிறப்புக்கள் அழுகுற பாடல்களில் வெளிப்படுகின்ற தன்மையினை நோக்குவோம்.

→ உறவினர்களும், தேவர்களும் வணங்கித் தொழும் வகையில் நின்றவள்.
→ தசரதச் சக்கரவர்த்தியின் முதல் பட்டத்து அரசியாக விளங்குபவள்.
→ மூன்று உலகையும் படைத்த பிரம்மனை முன் படைத்த திருமாலை மகனாக இராமன் பெற்றெடுத்த பெருமைக்குரியவள்
→ குகனால் அன்புருக வணங்கப்பட்ட சிறப்புக்குரியவள்
→ வேடுவ குலத்தில் பிறந்த குகனையும் தன் பிள்ளைகளோடு சேர்ந்து வாழ்த்தியவள்
→ இராமனைப் பிரிந்தமையால் மிகுந்த துன்பமடைந்தவள்
→ கொடி போன்ற மென்மையானவள்

→ தான் பிறந்தமையால் தன் பெற வேண்டிய செல்வங்களை துறந்தவள் என பரதனால் கூறப்பட்ட சிறப்புக்குரியவள்.

இவற்றை,

" சுற்றத்தார் தேவரொடும் தொழு நின்ற கோசலை...
கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி...
மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்றத்தால்...
கன்று பிரி கராவின் துயர் உடைய கொடி வினவ
நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால்...

எனும் பாடிலடிகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

03. குகப்படலத்தில் குகனின் சிறப்பு, குணப்பண்புகள் என்பன வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?

குகப்படலத்தில் பிரதான கதாபாத்திரங்களில் ஒன்றாக வீளங்குவது குகனது பாத்திரமாகும். அக் குகனது குணப்பண்புகளை இங்கு நோக்குவோம்.

→ கோசலையைப் பற்றி பரதன் கூறியதைக் கேட்டு அவளது பாதங்களில் வீழ்ந்து அழது வணங்கியவன் இதனை,

" என்றலுமே அடியின்மிசை நெடிது விழுந்து அழுவானை இவன்... எனும் பாடடிகள் வாயிலாக அறியலாம். மேலும்,

→ இராமனுக்கு இனிய சகோதரனாகவும், இலக்குவன், பரதன், மற்றும் சத்ருக்கனுக்கு மூத்த அண்ணனாகவும் விளங்கியவன், அத்தோடு மலை போன்ற திரண்ட நெடிய தோள்களை உடையவனாகவும் குகன் விளங்கினான். இதனை,

" இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும், மூத்தான்
குன்று அனைய திரு நெடும் தோள் குகன் என்பான் "
எனும் பாடலடிகள் இதனை தெளிவுறுத்துகின்றன,

இவை மட்டுமன்றி,

→ இராமன் முதலிய தன் பிள்ளைகளுடன் சகோதரனாக இணைத்து கோசலையால் வாழ்த்தப்பட்டவன்
→ தன் துதிக்கையால் வீரச் செயல்களை செய்கின்ற ஆண் யானை போன்றவன் ஆண்மகனாக விளங்குபவன்.
→ கொடுமைகள் செய்த கைகேயியையும் தன் நல்ல கைகளால் வணங்கியவன் இவ்வாறு எயினர் கோன் குகனின் சிறப்பும், பெருமையும் அழகுற வெளிப்படுவதனைக் இங்கு கண்டுகொள்ளலாம்.

04. குகப்படலத்தில் சுமித்திரையின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக?

குகப்படலத்தில் சுமித்திரையின் குணப்பண்புகளை பின்வருமாறு காணலாம். அறத்தின் உருவம் போல் அதாவது தரும தேவதை என்று சொல்லத்தக்க வகையில் கோசலையின் அருகில் நின்றவள், அவள் நிலை கண்ட மாத்திரத்தில் இவர் யார் என குகனால் வினவப்பட்டவள். மேலும், தன் சத்தியநெறியில் நின்று சிறிதும் தவறாது தன் உயிரைத் தியாகம் செய்த தசரதனின் இளைய பட்டத்து அரசியாவாள். இதுமட்டுமன்றி, இராமபிரானின் பின் பிறந்தவன் என்று சொல்லத்தக்க வகையில் இராமனின் நிழலாக பின் தொடரும் இலக்குவனனைப் மகனாக பெற்றெடுத்த பெருமைக்குரியவள்.

05. குகப்படலத்தில், பரதனின் சிறப்பு, குணப்பண்புகளை தெளிவுறுத்துக?

குகப்படலத்தில் பரதனின் குணப்பண்பும், சிறப்புகளும் வெளிப்படும் தன்மையினை இங்கு நோக்குவோம்.

→ தனக்கு கிடைத்த அரச பதவியை துறந்த நற் செயலால் முன்னர் உலகில் ஆட்சி செய்த மன்னர்களை கீழ்ப்படுத்தி உயர்ந்து நின்றவன்
→ வீரக்கழல் அணிந்த வலிமையான கால்களைக் கொண்டவன்
→ வெற்றி பொருந்திய மாலையை அணிந்தவன்
→ தான் பிறந்தமையால் கோசலை பெற வேண்டிய அரச செல்வங்களை துறந்தவள் என தன் மனதில் வேதனை கொண்டவன்

→ குகனை தன் அண்ணன் எனவும், இராமனுக்கு இனிமையான சகோதரன் எனவும் உரைத்தவன்
→ தன் தாய்மாரான கோசலை மற்றும் சுமித்திரை ஆகியோர் மீது மிகுந்த அன்பும் கைகேயியின் மீது மிகுந்த வெறுப்புணர்ச்சியும் கொண்டவன்
→ தான் பிறந்த கைகேயியின் வயிற்றை பாழ்பட்ட வயிறு எனக் கூறியவன்

06. குகப் படலத்தில் கைகேயியின் கொடுமை எவ்வாறு காட்டப்படுகின்றது? (கைகேயியின் குணப்பண்புகள்)

இப் பகுதியில் கைகேயியின் குணப்பண்புகள் மற்றும் கொடுமை பற்றி இங்கு நோக்குவோம். இங்கு அதிகமாக அவளது கொடுமைக் குணங்களையே காணமுடியும்.

கொடுமைகள்

தன் கணவனை சுடுகாட்டிற்கு அனுப்பியவள், அதாவது தன் வரத்தின் காரணமாக இராமன் காடு செல்ல அவன் பிரிவைத் தாங்காது தசரதன் இறந்தான். மேலும், தன் மகனாகிய துன்பக் கடலில் செல்ல வழிவகுத்தவள் எனவும், கருணைக் கடலாகிய இராமன் கடுமையான காட்டிற்கு செல்ல வழிசெய்தவள் எனவும், தன் மனத்தால் நினைத்து செய்யும் துன்பங்களால் உலகம் முழுவதையும் அவலிட்டவள், அதாவது திருமால் அன்று மூவடியால் உலகை அளந்தான் ஆனால் கைகேயி தன் செயலால் மூவுலகையும் துன்பத்தில் மூழ்கச்செய்தவள். இது மட்டுமன்றி, துன்பங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள், துன்பக் குறிப்பினை சிறிதும் தன் முகத்தில் காட்டாதவள் என்பனவும் கைகேயியின் கொடுமைக் குணத்திற்கு எடுத்துக்காட்டாகும். இவற்றை,

" சுடு மயானத்திடை தன் துணை ஏக
தோன்றல் துயர்க் கடலில் ஏக
கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி ஏக...

எனும் பாடல் வாயிலாக அறியமுடிகின்றது.

குறிப்புகள்

→ தசரதனின் இரண்டாவது மட்டத்து அரசியானவள்
→ பரதனை மகனாகப் பெற்றெடுத்தவள்
→ துன்பம் அனைத்தையும் தோற்றுவித்தவள்
→ பழியை குழந்தையாக வளர்க்கும் செவிலித் தாயானவள்
→ துன்பக் குறிப்பை சிறிதும் வெளிக்காட்டாத முகத்தை கொண்டவள்
→ பாழ்பட்ட வயிற்றினை கொண்டவள் என பரதனால் கூறப்பட்டவள்

07. குகப்படலத்தில், கோசலை பரதன் மற்றும் குகனை தேற்றும் விதம் மற்றும் வாழ்த்தும் தன்மை பற்றி எடுத்துரைக்குக?

பரதன் குகனை அறிமுகம் செய்ததும், கோசலை அவர்களை நோக்கி, புத்திரர்களே நீங்கள் இனித் துன்பத்தால் வருந்த வேண்டாம், இராம இலக்குவனர்கள் நாட்டை விட்டு காடு நோக்கி சென்றதும் நன்மை ஆகி விட்டது ஏனெனில் குகன் எனும் நல்ல நண்பனை பெற்றமையால் ஆகும் என அவர்களை தேற்றுவதுடன் அவர்களை வாழ்த்தி பின்வருமாறு உரைத்தாள்.

மலை போன்ற வலிமையான தோள்களை கொண்டவனும், தன் துதிக்கையால் வீரச் செயல் புரியும் ஆண்யானை ஒத்த காளையாகிய இக் குகனோடு சேர்ந்து நீங்கள் ஐந்து பேரும் இந்த நீண்ட நிலவுலகை நெடுங்காலம் ஆட்சி செய்வீர்களாக என வாழ்த்தினாள்.

" நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால்
நாடு இறந்து காடு நோக்கி
மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று
ஆம் அன்றே விலங்கல் திண் தோள்
கை வீரக் களிறு அனைய காளை இவன்
தன்னோடும் கலந்து நீவீர்
ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்
காலம் அளித்தீர் என்றாள். எனும் பாடல் அத் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது.

08. குகப்படலத்தில், பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை எடுத்துரைக்குக?

உறவினர்களும், தேவர்களும் வணங்கும் படி நின்ற கோசலையை கண்டு இவர் யார்? என குகன் வினவ பரதன் பின்வருமாறு கோசலையை அறிமுகம் செய்கின்றான்.

அரசர்கள் தினமும் வந்து தங்குகின்ற முன்றிலை உடைய தசரதச்சக்கரவர்த்தியின் முதல் மட்டத்து இராணியாக விளங்குபவர், மேலும் மூன்று உலகையும் படைத்த பிரம்மனை தன் நாபிக்கமலம் மூலம் முன் படைத்த திருமாலின் அவதாரமாகிய இராமனைத் தன் மகனாக பெற்றெடுத்த சிறப்புக்குரியவள்.

இது மட்டுமன்றி தான் பிறந்த காரணத்தினால் தான் பெற வேண்டிய அரச செல்வமனைத்தையும் துறந்த பெருமைக்குரியவள் எனப் பரதன் குகனுக்கு உரைத்தான்.

இதனை

" கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி
மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம்,யான்
பிறந்தலால், துறந்த பெரியாள், என்றான்...

எனும் பாடலடிகவ் தெவிவுறுத்துகின்றன.

09. குகப்படலத்தில், பரதன் குகனை கோசலைக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை எடுத்துரைக்குக?

கோசலையின் பாதங்கவில் வீழ்ந்து அழுவானைப் போல நின்ற குகனை யார்? என கோசலை வினவ பரதன் பின்வருமாறு குகனை அறிமுகம் செய்கின்றான்.

இவன் இராமனுக்கு இனிய சகோதரனாக விளங்குபவன், அதுமட்டுமன்றி இலக்குவன், சத்ருக்கனன் மற்றும் எனக்கும் அண்ணனாக விளங்குபவன் மேலும் மலை போன்ற திரண்ட நெடிய தோவ்களைக் கொண்ட குகன் எனும் பெயர் படைத்தவன் இவனாவான் எனவாறு அறிமுகம் செய்கின்றான். இதனை,

" இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும், மூத்தான்
குன்று அனைய திரு நெடும் தோள் குகன்
என்பான் இந் நின்ற குரசில் என்றான்.

எனும் பாடலடிகவ் வாயிலாக காணலாம்.

10. குகப்படலத்தில், பரதன் சுமித்திரையை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை எடுத்துரைக்குக?

அறத்தின் உருவம் போல் அருகில் நின்ற சுமித்திரையை பார்த்து குகன் யாரென வினவ அதற்கு பரதன் பின்வருமாறு பதிலவித்தான்.

இவள், சத்திய நெறியில் இருந்து சிறிதும் தவறாதவனாகிய வாய்மை உடையவனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் இளைய பட்டத்து அரசியாக விளங்குபவள், மேலும், அனைவராலும் வணங்கத் தக்க குல தெய்வமாகிய இராமனை விட்டுப் பிரியாதவனாகிய இலக்குவனனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள் என குகனுக்கு அறிமுகம் செய்கின்றான் பரதன்.

" என்ன நெறி திறம்பா தன் மெய்யை நிற்பது ஆக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும் தொழு குலமாம்
இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்ன பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள் என்றான்.

எனும் பாடலடிகவ் அத் தன்மையை வெவிக்காட்டுகின்றன.

11. குகப்படலத்தில், பரதன் கைகேயியை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை எடுத்துரைக்குக?

இங்கு நிற்கும் இவள் துன்பங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள், பழியாகிய குழந்தையை வளர்க்கின்ற தாயாக விளங்கின்றவள். மேலும், அவளது பாழ்பட்ட தீய வயிற்றில் தங்கியிருந்த என் உயிராகிய சுமை குறைந்து தேய்வடைய, இவ் உலகத்தில் துன்பக் குறிப்பில்லாத முகத்தைக் கொண்டவள் இவள் மாத்திரமே. இவளே என்னைப் பெற்றெடுத்த கைகேயி என்பவள் என பரதன் குகனுக்கு கைகேயியை அறிமுகம் செய்தான்.

12. குகப்படலத்தில் அணிகளின் வெளிப்பாடு பற்றி தெளிவுறுத்துக?

உவமையணிகள்

1. கன்றுபிரி கராவின் துயர் உடைய கொடி வினவ..

உவமானம் - கன்றினைப் பிரிந்த காராம்பசு
உவமேயம் - இராமனை பிரிந்த கோசலை
பொதுத்தன்மை -துன்பம், துயரம்

2. குன்று அனைய திருநெடுந் தோள் குகன்..

உவமானம் - மலை
உவமேயம் - குகனது தோள்
பொதுத்தன்மை -வலிமை

3. விலங்கல் திண்தோள் கைவீரக் களிறு அனைய காளை இவன்

உவமானம் - துதிக்கையால் வீரச் செயல் புரியும் ஆண்யானை
உவமேயம் - குகன், குகனது கைகள்
பொதுத்தன்மை - வீரம்

4. அன்னப்பேடை சிறை இலாது ஆய்கரை தோணி அடைதல்..

உவமானம் - அன்னம் இறகு இல்லாது கரை அடைதல்
உவமேயம் - தோணி கரை அடைதல்
பொதுத்தன்மை -கரை அடைதல்

5. பூங்கொடி போன்ற கோசலை

உவமானம் - பூங்கொடி
உவமேயம் - கோசலை
பொதுத்தன்மை -மென்மை

உருவக அணிகள்

1. அறந்தானே என்கிற அயல் நின்றாள்.. -அறமாகிய சுமித்திரை
2. துயர்கடல் - துயரமாகிய கடல்
3. கருணை ஆர்கலி - கருணைக் கடலாகிய இராமன்
4. பழிவளர்க்கும் செவிலி - பழியாகிய குழந்தையை வளர்க்கும் தாய்

www.ikedu.lk

13. கம்பரின் மொழி நடைச் சிறப்புக்கள், கவித்துவச் சிறப்புக்கள் பற்றி குறிப்பிடுக?

→ மணிப்பிரவாள மொழி நடையினை கையாண்டிருத்தல்
→ இதிகாசக் கதையின் தன்மைகளை பாடல்களில் வெளிப்படுத்தியிருத்தல்
→ ஓசை நயம் மிக்கதாக பாடல்கள் இடம்பெற்றிருத்தல்
→ இதிகாசக் கதாபாத்திரங்களின் உரையாடல் சார்ந்ததாக பாடல்கள் இடம்பெற்றிருத்தல்
→ தமிழ்மொழியுடன் வடமொழிச் சொற்களையும் இணைத்திருத்தல்
கொற்றம், குரசில்
→ அணிகளை பொருத்தமான இடங்களில் காட்டியிருத்தல்
உவமையணி, உருவகஅணி
→ வாசகரின் மனதில் காட்சி தோன்றும் வகையில் பாடல்கள் விளங்குதல்
→ பக்திச் சுவையினை படிப்பவர் மனதில் ஏற்படுத்தும் வகையில் பாடல்கள் இடம்பெற்றிருத்தல்

எது நல்ல சினிமா

அலகு 09

வினா விடை

1. எது நல்ல சினிமா எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

→ சு. தியோடர் பாஸ்கரன்

2. பேசும் படம் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு யாது?

→ 1930

3. நாடகம் என்பதன் விளக்கம் யாது?

→ நிகழ்ச்சி ஒன்றை சபையோரின் முன்பாக நிகழ்த்திக் காட்டுவதாகும்

4. தமிழ் நாட்டில் சினிமா வளர்ச்சி அடையாமைக்கான காரணம் யாது?

→ நாடகத்திற்கு அடிமைப் பட்டுக் கிடந்தமை

6. தமிழ் சினிமாவின் தனித்துவமான அம்சம் யாது?

→ சினிமா மொழி

7. சினிமா மொழியின் அம்சங்கள் எவை?

→ காட்சிப்படிமம்

ஒலி

படத்தொகுப்பு

8. நல்ல சினிமா ஒன்றில் உள்ளடங்க வேண்டியவை எவை?

மையக்கருத்து

காட்சிப் படிமங்கள்

காட்சிப் படிமங்களுக்கு ஏற்ற ஒலி

படத்தொகுப்பு

தொழில் நுணுக்கங்கள்

முறையான குறியீட்டுப் பிரயோகம்

9. சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்கள்?

✷ ஆரம்ப காலத்தில் புராண நாடகங்களே படமாக்கப்பட்டன

✷ நாடகம் பார்ப்பவரின் கோணத்திலிருந்து அவை படமாக்கப்பட்டன

✷ நாடகக் கம்பனிகள் கல்கத்தாவிலும், பம்பாய்யிலும் தங்கள் நாடகங்களை படமாக்கியமை

✷ அண்மைக் காலம் வரை இயக்குனர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள் என அதிகமானோர் நாடகத்துறையிலிருந்தே வந்தமை

✷ நாடகத்தில் இடம் பெறும் அதிகமான பண்புகளை சினிமா தன்னகத்தே கொண்டுள்ளமை

10. தமிழ் சினிமாவில் காணப்படும் குறைபாடுகள் எவை என கட்டுரையில் கூறப்படுகின்றது?

✷ காட்சிப் படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளர்ச்சியடையாமை

✷ சினிமா நாடகத்திற்குள் அடிமைப்பட்டு இருத்தல்

✷ சினிமா மொழியினை, அதன் பண்பினை முறையாக வளர்த்துக் கொள்ளாமை

✷ பேச்சுக்கும், பாட்டுக்கும் அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்தல்

✷ வாய்ப் பேச்சினால் கதை சொல்ல முற்படுதல்

www.ikeddi.lk

11. இக் கட்டுரையில் கட்டுரையாசிரியரால் உதாரணம் காட்டப்படும் திரைப்படங்கள் யாவை?

- ✷ காட்சிப்படிமம் - அழியாத கோலங்கள் பாலுமகேந்திரா
- ✷ ஒலியின் சிறப்பு - கல்லுக்குள் ஈரம் - பாரதிராஜா
- ✷ மயங்கித் தெளிதல் - பதேர் பாஞ்சாலி – சத்யத்ரேயின்
- ✷ குறியீட்டை பயன்படுத்தல் - -wild strawberries - பெர்க்மன்

12. கட்டுரையாசிரியரின் மொழிநடைச் சிறப்பு பற்றி எடுத்துரைக்க?

✷ தர்க்க ரீதியான கருத்துக்களை முன்வைத்திருத்தல்

✷ கட்டுரைக்குரிய பல உதாரணங்களை முன்வைத்திருத்தல்

✷ தமிழ் மொழியோடு கலைச் சொற்களையும் தேவைக்கேற்ப பயன்படுத்தியிருத்தல்

✷ அறிவியல் சார்ந்த மொழி நடையினை கையாண்டிருத்தல்

✷ கவிதைகளை, திரைப்படங்களை உதாரணங்களாக காட்டியிருத்தல்

✷ கலைஞர்களோடு சினிமாவை ஒப்பிட்டு காட்டியிருத்தல்

✷ சிறிய சிறிய வாக்கியப் பிரயோகங்களை இணைத்திருத்தல்

✷ காரண, காரிய தொடர்புகளுடன் விளக்கமளித்திருத்தல்

13. சினிமா மொழியினை சிறப்பான முறையில் கையாண்டவர்கள் யாவர்?

ஹிட்ச்சாக்
உடிஆலன்
அரவிந்தன்
மணிகௌல்
அடூர் கோபல கிருஸ்ணன்

14. இன்றைய சினிமாவில் காணப்படும் நாடகத் தன்மைகள் யாவை?

✷ கதாபாத்திரங்கள் சதுரமான திரையின் விளிம்பிலிருந்து வருதல்

✷ மேடைக்குள் நுழைவதைப் போல வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைதல்

✷ குரலை ஏற்றி இறக்கி பேசாமால் கத்திப் பேசுதல்

✷ பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்கள் கமராவைப் பார்த்து பேசுதல்

✷ படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்துக் கொண்டிருத்தல்

15. நல்ல சினிமா எது என்பது பற்றி கட்டுரையாசிர் கூறுகின்றார்? .

நல்ல சினிமா என்பது ஓர் நாடகத்தின் பண்புகளைக் கொண்டிருப்பதல்ல. திரையில் தோன்றுவதெல்லாம் சினிமா ஆகாது. திரைப்படமாக்கப்பட்ட நாடகம் சினிமா அல்ல. சினிமா கமராவில் பதிவு செய்யப்பட்ட ஓர் பல்சுவை நிகழ்ச்சியும் அல்ல. என்பதை கட்டுரையாசிரியர் கூறுகின்றார்.

மேலும் நல்ல சினிமாவில் சினிமா மொழி முக்கியமானதாகும். அதாவது காட்சிப் படிமங்கள், அக் காட்சிப் படிமங்களுக்கு ஏற்ற ஒலி, மற்றும் படத்தொகுப்பு, எனும் பண்புகளை முறையாக கொண்டிருப்பதே ஓர் நல்ல சினிமா எனப்படும்.

16. சினிமா ஒன்றில் காட்சிப்படிமம்; ஒலி; படத்தொகுப்பு; குறியீடு என்பன பற்றி விளக்குக?

- காட்சிப்படிமம்

உதாரணம் - அழியாத கோலங்கள் திரைப்படம்

→ வாய்க்கால் ஒன்றில் சிறுவர்கள் நீந்தி விளையாடுதல், அதில் ஒருவன் முழ்கி இறத்தல், கிராமத்து மக்களின் வருத்தம், சிறுவனின் ஈமக்கிரியை இவை காட்சிகளாக வெளிப்படுகின்றன.

- ஒலி

உதாரணம் - கல்லுக்குள் ஈரம் திரைப்படம்

→ சலவைத் தொழிலாளி ஒருவன் குடித்து விட்டு ஆடும் போது அவரை அடையாளப்படுத்தும் கிராமியப் பாடல் இசை

- படத்தொகுப்பு

→ வருத்தம் தோய்ந்த ஒரு மனிதனின் முகம், ஒருதட்டில் கோழி வறுவல், புன் சிரிப்புடன் அந்த மனிதனின் முகம் என மூன்று காட்சிப் படிமங்கள். இங்க வருத்தம் பின் மகிழ்ச்சி எனும் கோணங்களில் இதனை நோக்கலாம்.

- குறியீடு

உதாரணம் - உதிரிப்புக்கள்

→ சூல் கொண்ட கருமேகம் அன்பிற்கு ஏங்கும் ஓர் பெண்ணின் நம்பிக்கையின் குறியீடாக காட்டப்படுகின்றது.

www.ikeou.lk

தமிழ் மொழியும் இலக்கியமும்
தமிழ் இலக்கியத் தொகுப்பு
மூன்றாம் தவணையை அடிப்படையாக கொண்ட
மாதிரி வினாத்தாள் (பகுதி III)
தரம் 10 **நேரம் 2 மணி**

அறிவுறுத்தல்

முதலாம் வினா, இரண்டாம் வினாவிற்கும், மூன்றாவது வினாவில் ஒன்றினையும், நான்காவது வினாவில் ஒன்றினையும், 5ம்,6ம்,7ம் வினாக்களில் ஒன்றினை தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு மட்டும் விடை எழுதுக

01 . சுருக்கமான விடை தருக.

1. கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்..

அ. பிணக்கு அறுத்தல் எள்றால் என்ன?
ஆ. அவைக்களன் என்பது யாது?

2. புலங்களோடு கரணமும் ஆவியும்
.போந்து நின்ற விருப்புடன்..

அ. புலன்கள் எனப்படுபவை ?
ஆ. இவ்வடிகளின் ஆசிரியர் யார்?

3. பிரசண்ட மாருதத்திற்கு பிறகு என்று சொல்கின்ற பிறகு
அந்தச் சபையில் நிலவியது

அ. இவ்வடிகள் இடம் பெறும் கட்டுரை யாது?
ஆ. பிரசண்ட மாருதம் என்பதன் கருத்து?

4. பங்கப் பழனத்து உழும் உழவர்
பலவின் கனியைப் பறித்தது..

அ. பங்கம் என்றால் என்ன?
ஆ. பழனம் எள்றால் எள்ன?

5. பட்டி பெருகவேணும் தம்பிரானே
பாற்பானை பொங்கவேணும் தம்பிரானே..

அ. பட்டி பெருகுதல் என்றால் எள்ன?
ஆ. தம்பிரான் எனப்படுபவர் யார்?

6. இந்தப் பைல் இஞ்ச எப்படி வந்தது...

அ. இக் கூற்று யாரால் யாருக்கு உரைக்கப்பட்டது?
ஆ. பைல் என்பதன் திருத்திய வடிவம் யாது?

www.lkedu.lk

7. மாமி மகளே என்ர மருதக்களி வங்கிசமே
ஏலாங்கிராம்பே..

அ. வங்கிசம் என்பதன் கருத்து யாது?
ஆ. இவ்வடிகள் எத் தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

8.கானவர் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கவனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்..

அ. கானவர் எனப்படுவோர் யாவர்?
ஆ. காயசித்தி என்றால் என்ன?

9. கடுமையார் கானத்து கருணையார்கலி ஏக..

அ. கருணை ஆர்கலி இங்கு யார்?
ஆ. இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அணி யாது?

10. அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து மேலெறினான்
தானும் ஏறினான்..

அ. இவ்வடிகளில் யாருடைய சிறப்பு சுட்டப்படுகின்றது?
ஆ. ஏறினான் என்பது குறிக்கும் இரு பொருள்?

02. பின்வரும் செய்யுட்பகுதிகளையும், உரைப்பகுதிகளையும் வாசித்து கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக.

01. ஆடிக் குடத்து அடையும் ஆடும் போதே இரையும்
மூடி திறக்கின் முகம் காட்டும் ஓடி மண்டை
பரபர எனும் பாரில் பிண்ணாக்கு உண்டாம்
உற்றிடும் பாம்பு எள்ளு எனவே ஒது.

அ. இப்பாடலைப் பாடியவர் யார்?
ஆ. இங்கு சிலேடையாக ஒப்பிடப்பட்டவை எவை?

02. மாதம் மூன்று மழை உள்ள நாடு
வருடம் மூன்று விளைவு உள்ள நாடு
வேதம் மூன்றும் பலா உள்ள நாடு
விஷேஷம் மூன்றும் குலா உள்ள நாடு
போதம் மூன்றும் நலன் செய்யும் நாடு
புவனம் மூன்றும் வலஞ் செய்யும் நாடு
நாதம் மூன்று உருவான குற்றால
நாதர் ஆரிய நாடு எங்கள் நாடே.

அ. விசேஷம் மூன்று எனப்படுபவை எவை?
ஆ. நாதம் மூன்றுரு எனப்படுவோர் யாவர்?

www.ikedu.lk

03. சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
கொற்றத்தார் குரசில் இவர் ஆர் என்று
குகன் வினவ, கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று
உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான்
பிறந்தலால், துறந்த பெரியாள், என்றாள்

அ. கோசலையின் சிறப்பினை குறிப்பிடுக?
ஆ. மூன்று உலகும் ஈன்றான் யார்?

4. இந்த சினிமா மொழியை அதன் தன்மையை தனித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது அங்கே நல்ல சினிமா பிறக்கின்றது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகின்றது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது.

அ. நல்ல சினிமா எப்போது பிறக்கின்றது?
ஆ. சினிமா நலிவடையக் காரணம் யாது?

5. இருதுபர்ணன் என்ற அரசன் தமயந்தியினுடைய இரண்டாம் சுயம்வரத்தில் கலந்து கொள்ள தேரில் விரைகின்றான். தேரை நளன் ஓட்டியபடியால் அது மின்னல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. தேர் ஒரு சம தரையைக் கடக்கும் போது அங்கே தான்றிக் காய்கள் கூடை கூடையாக காய்த்திருப்பதைக் கண்டார்கள். அப்போது இருதுபர்ணன் தலையை திருப்பி ஒரு பார்வை பார்த்து விட்டு பத்தாயிரம் கோடி காய்கள் என்று சரிகணக்காக சொன்னானாம். ஆவன் ஒரு பார்வையில் எண்ணும் அட்சய இருதயம் என்ற கலையை படித்து இருந்தான்.

அ. அட்சய இருதயக்கலை என்றால் என்ன?
ஆ. இவ் உரைப்பகுதியில் புலப்படும் இலக்கியம் யாது?

03. கம்பியூட்டர் சிறுகதையை அடிப்படையாக கொண்டு,

அ. உவமைத் தொடர்களின் வெளிப்பாடு
ஆ. அரவிந்தன் எனும் பாத்திர வார்ப்பு

என்பன பற்றி தெளிவுறுத்துக.

<u>அல்லது</u>

குகப்படலம் எனும் பகுதியில்,

அ. பரதன் குகனை கோசலைக்கு அறிமுகம் செய்தல்
ஆ. கோசலையின் வாழ்த்துரை

ஆகியவற்றை எடுத்துரைக்குக.

04. திருக்குற்றாலக் குறவஞ்சியில்,

அ. நாட்டுவளம்
ஆ. குற்றாலநாதர் பெருமை

ஆகியன புலப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

தனிப்பாடல் பகுதியில்,

அ. காளமேகப்புலவர் கூறும் பாம்புக்கும் எள்ளுக்கும் இடையிலான ஒப்பீடு
ஆ. காளமேகப் புலவரின் கவியாற்றல்

ஆகியவற்றை எடுத்துரைக்குக.

பின்வரும் 5, 6. 7 ஆகிய வினாக்களில் ஒரு வினாவிற்கு மட்டும் விடை தருக.

05. நாட்டார் பாடல் பகுதியில்,

அ. ஏர்ப்பாடலில், உழவனின் பரந்த மனப்பாங்கு
ஆ. காதல் பாடலில், காதலி மீதான காதல்

06. எது நல்ல சினிமாவில்,

அ. சினிமாவில் காணப்படும் நாடகத்தனம்
ஆ. கட்டுரையாசிரியர் மொழிநடை

07. நீதிப்பாடல் பகுதியில்,

அ. பெரியவர் சிறியவர் பற்றி வெற்றிவேட்கை கூறுவன
ஆ. நல்லவர் நட்பும், தீயவர் நட்பும் பற்றி நாலடியார் கூறுவன

●●●●●

www.ikedu.lk